65p



MR K. JEYAKUMAR MAAT, FIAB
MRS T. JEYAKUMAR B.A.(CEY)
64 GLENCOE AVENUE
NEWBURY PARK
ILFORD, ESSEX IG2 7AN

லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகை

# அலை ஓசை

# *Alai Osai*

ALAI- 7 OSAI - 1
JAN - FEB - 1992

வட லண்டன் வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி
உங்கள் மத்தியில் ஓர் புதிய வியாபார நிலையம்

இலங்கை உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சீதா ஸ்ரோர்ஸ்

256, Fore Street,
Edmonton,
London N18 2TY

- வியாபார நேரம் – வாரத்தின் எல்லா நாட்களும்
  காலை 8,00 மணி –இரவு 10,00மணி
- உங்கள் தேவைகளான இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பண்டங்கள, மற்றும் பொருட்கள்
- இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு மரக்கறி வகைகள்
- தமிழ் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள்
- வீடியோ, ஓடியோ, கொம்பக்ட் டிஸ்க்
- £15 இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% தள்ளுபடி 19.04.1992 வரை கொடுக்கப்படும்
- Fax Service available both ways.

Tel: 081 - 884 4979
Fax: 081 - 807 5232

Parking Facilities Available except
7.00 a.m. - 10.30 a.m. & 4.00 p.m. - 6.30 p.m.

# தையலே வருக



தமிழ்மகள் தையலே வருக – நீ
தமிழ் மகனும் மாலே சூட
தமிழனும் உனைவாழ்த்தி நின்று
தரணியாள தையலே வருக நீ
தாய்நிலமும் மீட்டு அதில்
தமிழனவன் அமைதிகாண
தமிழ்மகள் தையலே வருக –நீ
தமிழ்மகனும் மாலே சூட

தாயகத்து வேங்கையும் வெற்றிகொண்டு
தமிழ்மகளைக் கைப்பிடித்து – ஈழத்
தரணியதில் வாழ்ந்திடவே
தமிழ்மகள்தையலே வருகநீ
தமிழினமும் களி கொண்டு
தரணியதில் தமிழ்மணம் பரப்பிடவே
தமிழ்மகள் தையலே வருகநீ
தமிழ்மகனும் மாலே சூட




தமிழினமும் ஒன்றுகூடி – நம்
தாயகத்தை மீட்டிடவே
தமிழ்மகளே வந்திடுவாய் –நீ
தமிழ்மகனும் மாலே சூட
தமிழ்ஈழந்தனைப் பிடித்து – அங்கு
தமிழ்ப்பண்பதனை விதைத்திடுவோம்
தமிழ்மகள் தையலே வருக – நீ
தமிழ் மகனும் மாலே சூட

ஈழந்தனை மீட்டிடுவோம் - அதில்
இன்பமுடன் உழுது நிற்போம்
தமிழ்ப் பண்பதனை விதைத்து - நம்
தமிழர்தம் சுதந்திரத்தைக் காட்டிடுவோம்
பொங்கல் தனைப் பொங்கி - தமிழர்
பண்பதனை உணர்த்திடுவோம்
தமிழ்மகள் தையலே வருக -நீ
தமிழ்மகனும் மாலே சூட

உழதுண்டு வாழ்ந்திடுவோம் - ஈழந்தனை
உழுதுநின்று பெருக்கிடுவோம்
பண்டம்பல தமிழன்பசி நீங்கிடவே
பாரினில் பஞ்சந்தனை ஓட்டிடுவோம்
ஏரேடுத்து ஏத்திடுவோம் - பகலவனை
எட்டுத்திக்கும் ஒளிபெறவே
வையத்தில் வாழ்ந்திடுவோம் - தமிழ்
வஞ்சிதனைக் கைபிடித்து(தையலே வருகநீ)

செல்வி தி தி உமாமூர்த்தி
ஈஸ்ட்காம்





# போரா? சமாதானமா?

வடபகுதி மீது மீண்டும் போர் மேகங்கள், தொண்டமானின் சமாதான முயற்சி கொஞ்சம் கொஞ்சமாக அமிழ்ந்து கொண்டே போகின்றது. பல வருடகால அரசியல் அனுபவம் உள்ளவர், எந்த முயற்சியிலும் பின்னடைவை அடையா தவர் எனப் பெயர் பெற்ற அமைச்சர் தொண்டமான் சிங்கள மக்களின் எதிர்ப்பையும், அரசாங்கத்தின் கைகழுவுதலையும் பெற்றுக் கொண்டு பின வாங்குகின்றார். அப்படியானால் இப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு உற்சாகமளித்தவர் யார்? தான் சார்ந்த கட்சியின் பக்கபலம் இல்லாமல் தனித்துத் தொண்டமான் இந்தப் பேச்சுவார்த்தையில் இறங்கினார் என்பதை எவரும் நம்பத்தயாரில்லை. ஆனால் பலரின் ஊகப்படி பிரேமதாசாவே இப் பேச்சுவார்த்தையை நடத்தத் தூண்டியிருக்கிறார். அத்துடன் தன்னையும் தனது கட்சியையும் இப் பேச்சு வார்த்தையிலிருந்து எட்டியே வைத்துக் கொண்டி ருந்தார். ஆனால் சிங்கள மக்களின் குறிப்பாக பௌத்த சங்கங்களின் பலத்த எதிர்ப்பு பிரேமதாசா வையும், அவரது கட்சியையும் இக்கட்டான சூழ்நிலையில தள்ளிவிட்டது. இதற்கு உடனடி நிவாரணம் தேட ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கையொன்றை வெளி யிட்டது. அதாவது தொண்டமானின் சமாதான முயற்சி அவரது தனிப் பட்ட முயற்சியேயன்றி ஐக்கியதேசியக் கட்சினுடைய தல்ல. ஆனால் இதன் பின்பும் தொண்டமான் என்ன நடந்தாலும் பொங்க லின்பின் வட பகுதி செல்வேன் என்று சூழுரைத்தார். ஆனால் திடீரென 4,5 தினங்களின்பின் திடமான ஒரு சமாதானத் திட்டமில்லாமல் யாழ் செல்வது பிரயோசனமில்லையென பின்னடிக்கத் தொடங்கி விட்டார். எந்த எதிர்ப்பு வந்தாலும் தயங்கமாட்டேன் என்றவர் பின்வாங்கியது பௌத்த சங்கங்களின எதிர்ப்பைக் கண்டா? அல்லதுபிரேமதாசாவின் வற்புறுத்தலிலா? ஆனால் வழக்கம் போல் கொழும்புப் பத்திரிகைகள் புலிகள் சரியான பதில் அளிக்கா ததாலேயே தொண்டமான் விஜயம் பின்போடப்பட்டதாக செய்தி வெளியிட டன. ஆனால் புலிகள் தாம் பேச்சுவார்த்தைக்கு எந்நேரமும் தயாரெனவும் தொண்டமான் வரலாமெனவும் பகிரங்கமாகவே அறிவித்திருந்தனர்.

இதற்கிடையில் பாரிய இராணுவத்தாக்குதலை வடபகுதி மீது நடத்த இராணு வத் தினர் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். 80,000 இராணுவத்தின் பெரும்பகுதி வடபகுதியில் குவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக சீனாவிலி ருந்து தருவிக்கப்பட்ட சூப்பர் சோனிக் ஜெட் விமானங்கள் T-55 பிரதான கவசவாகனங்கள் என்பன கொண்டு வரப்பட்டுள்ளது. ஒப்பரேஷன் பலவேகயாவில் பேருதவி புரிந்த விசைப்படகுகள் மூன்று தற்சமயம் இயந்திரக் கோளாறு காரணமாக திரிகோணமலையில நிறுத்தப்பட்டுள்ளது. இதன் இயந்திரக்கோளாறை அறிய சீனாவிலிருந்து பொறியியலாளர்கள்

வருவிக்கப்பட்டுள்ளனர். ஆகவே கடற்படையின் விசைப்படகு பலம் சற்று குறைந்தே காணப் படுகின்றது. அத்துடன் அண்மையில் சீனாவிடமிருந்தும், செக்கோஸ்லோவாக்கியாவிடமிருந்தும் வாங்கப்பட்ட நவீனரக சிறு கவச வாகனங்களும் இவ்யுத்தத்தில் பாவிக்கப்படலாம் என நம்பப்படுகின்றது. ஒப்பரேஷன் பலகோயாவைப் போல படையினரின் தாக்குதல் வடபகுதி மீதும் கடற்கரையூடான தரைமார்க்க முன்னேற்றமாக இருக்குமென நம்பப் படுகின்றது. ஆனால் புலிகளும் தமது நிலைகளை பலப்படுத்தி வருகின்றனர். ஆகவே வடபகுதி மீதான தாக்குதலில் இரு பகுதியினருமே தமது நிலைப்பாடுகளை திடப்படுத்த புது யுத்திகளையும் நவீன ஆயுதங்களையும் பயன்படுத்துவர் என்பது திண்ணம். ஆனால் இராணுவத்தின் எந்தத் தாக்குதலுமே பெப்பிரவரி மாதம் முற்பகுதியில் பாரிஸில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குப் பிறகே நடைபெறும் என நம்பப்படுகின்றது. இதற்கிடையில் உதவிவழங்கும் நாடுகள் சில நிபந்தனைகளை இலங்கை மீது விதித்துள்ளதாக அறியப்படுகின்றது. இவற்றில் ஒன்று மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டுமென்பதே. இதன் பிரகாரம் ஜனதா விமுக்திப்பெரமுனவிற்கு எதிரான போராட்டத்தில் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த பொலிஸ் படையின் தலைமைப் பொறுப்பாளர் பிரேமதாசா உடுகம்பொல மூன்றுமாத கட்டாயலீவில் அனுப்பப்பட்டுள்ளார்.அத்துடன் மேலும் பல படையினர் கட்டாயலீவில் அனுப்பப்பட்டதாக அறியப்படுகின்றது. சிறிலங்கா அரசின் மேலும் ஒரு கண்துடைப்பே இதுவென நம்பப்படுகின்றது. இதனூடே முதல்தொகுதி அகதிகள் சுயவிருப்பம் என்று சொல்லிப் பலவந்தத்தின் பெயரில் தமிழ்நாட்டிலிருந்து கப்பல்மூலம் இவ்வாரம் திருகோணமலை கொண்டுவரப்பட்டுள்ளனர்.இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக குச்சவெளியில் இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 20 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஆகவே யுத்த மேகங்கள் மேலும் மேலும் வடக்கு கிழக்கு மீது சூழச்சூழ சமாதானத்தின் முகம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியுள்ளது. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரீஸில் முடிவடைந்ததும் பாரிய யுத்தமொன்றை வடபகுதி மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

தென்னவன்

# இன்டர் வியூ

ஆறு ஏழு இன்டர்வியூக்களுக்குச் சென்று படுதோல்வியடைந்த காரணத தால் சுந்தரமூர்த்தியின் மனத்தில் விரக்தி ஏற்பட்டிருந்தது. முன்கூட்டியே யாரையாவது தெரிவு செய்து வைத்துக் கொண்டு ' இன்டர்வியூ ' என்ற போலி நிகழ்ச்சியைக் கண் துடைப்புக்காக நடத்துவதாக யாரோ கூறியது உண்மையாக இருக்கலாமென அவன எண்ணினன்.

சுந்தரமூர்த்தியின் விரக்திக்கும் மனஉளேச்சலுக்குக் காரணம் அவன போட்டிருந்த வேலே விண்ணப்பம் ஒன்றுக்கு அன்றைய தபாலில வந்திருந்த' இன்டர் வியூ'க் கடிதந்தான்.

சுந்தரமூர்த்தியின் மேசையில் விரித்தபடியே கிடந்த அந்தக்கடிதம் அவனேப் பார்த்துச் சிரித்தது. 'என்னுடைய அழைப்பை ஏற்று இன்டர்வியூவுக்குப் போகப் போகிருயா அல்லது என்னேச்சுக்கு நூருகக் கிழித்தெறிந்து விட்டுப் பேசாமல் இருக்கப் போகிருயா' என்பதைப போல அந்தக் கடிதம் யன் னலூடாக வந்த காற்றில் படபடத்தது !

கடிதத்தை மடித்து உறையுள் போட்டு அதை மேசை லாச்சிக்குள போடப் போகும் போது சுந்தரமூர்த்தியின் நண்பன் சோமு அங்கே பிரசன்னமா ஞன்.

'என்ன கடிதம் அது' என வினவியவாறே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான் சோமு. நான் போட்டிருந்த வேலே விண்ணப்பம் ஒன்றுக்கு வழமை போல் 'இன்டர்வியூ' க்கடிதம் வந்திருக்கிறது! என்று அசுவராஸ்யமாகக் கூறிக்கொண்டே கடிதத்தைச் சோமுவிடம் நீட்டிஞன் சுந்தரமூர்த்தி.

கடிதத்தைப் படித்த சோமுவின் கண்கள் அகல விரிந்தன. 'மூர்த்தி இந்த நிறுவன மனேஜரை எனது அப்பாவுக்குத் தெரியும். எனது அப்பாவைப் பார்த்துச் சொல்லிவை. ஒருவேளே அப்பா உதவலாம் ! என்ருன் சோமு. சற்று உற்சாகத்துடன் காணப்பட்ட மூர்த்தியின் முகம கூம்பிப் போயிற்று.

'ஒரு வேளே அப்பா உதவலாமென்ருயே எதற்கு - உனது அப்பா நேரடியாக இதில் சம்பந்தப்படமாட்டாரா' என்று ஆதங்கத்துடன்

சோமுவைக் கேட்டான் சுந்தரமூர்த்தி. அப்பாவின் குணந்தான் உனக்குத்தெரியுமே' யாரிடமாவது உதவி கேட்டுப் பழக்கமில்லை. கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளவே அவர் விரும்புவார். எதற்கும் நீ வந்து பேசிப்பார் உன் அதிர்ஷ்டம்!' என்றான் சோமு.

பாதி உற்சாகத்துடன் சோமுவின் தந்தையைக் காணச் சென்றான் மூர்த்தி. அவரைக் கண்டு பேசிய பின் பாதி உற்சாகமும் பறந்து விட்டது. உலகப்பற்றை அறுத்துக் கொண்டிருக்கும் அரைஞானியின் உபதேசத்தை அரைமணி நேரம் கேட்கும் படியாயிற்று.

கடைசியாகச் சோமுவின் தந்தை கூறினார். 'தம்பி அந்த நிறுவனத்தின் மனேஜர் கடவுள் பக்தி மிக்கவர். கொஞ்சம் ஆசாரசீலர். அவர் முன் ஆசாரசீலனாகக் காட்சியளித்தால் வெற்றி கிடைக்கும். இதற்கு மேல் என்னால் ஒன்றுஞ் செய்ய இயலாது!
அரைஞானியின் உபதேசத்தைக் கேட்ட திருப்தியோடு சோமுவின் தந்தைக்கு வணக்கங்கூறி விடைபெற்றுக் கொண்டான் மூர்த்தி.

எதற்கும் சோமுவின் தந்தை கூறியதைப் போல ஆசாரசீலனாக வேடம் புனைந்து' இன்டர்வியூ' வுக்குப் போக நினைத்தான் மூர்த்தி. காரியம் ஆக வேண்டுமானால் பேய் வேடங்கூடப்புனையலாமே!

கருகருவென்று வளர்ந்து முதுகை எட்டிவிட வேண்டுமென்று ஆசைப் பட்டுக் கொண்டிருந்த பின் முடியை வெட்டி எறிந்தான். இரண்டங்குல அகலமாகத் தாடை வரை வளர்ந்து சிலிர்த்து நின்ற ' சைட் பேண்சை ' இரக்கமில்லாமல் வெட்டித் தள்ளினான்.

புதுத் தோற்றத்துடன் காட்சியளித்த மூர்த்தியைப் பார்த்து அவன் வசித்த தெரு வியந்தது. தனயனிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தின் காரணத்தை அறிய முடியாமல் தாய் தந்தையர் தவித்தனர்.

' இண்டர்வியூ ' வுக்கு வந்திருந்த அத்தனை பேருடைய கண்களும் மூர்த்தியை மொய்த்தன. திருநீற்றை உத்தூளனமாகப் பூசி, சுழு முனையில் துலக்கமாகத்தெரியும் சந்தனப் பொட்டும் வைத்துக் கொண்டு ஒரு வாலிபன் இந்தக் காலத்தில் ' இண்டர்வியூ' வுக்கு வந்திருப்பது அதிசயப்படக் கூடியது தானே!

'இண்டர்வியூ' வுக்கு வந்திருந்தவர்களையும் சோமுவின் அரைஞானியார் கூறிய உபதேசத்தையும் ஒப்பிட்டு நோக்கிய மூர்த்திக்கு நிச்சயம் தனக்கு

# லண்டன் செய்திகள்

## தமிழர் திருநாள்

Academy of Fine Arts உம் G -Com Computers உம் இணைந்து வழங்கும் தமிழர் திருநாள் 25.1.92 மாலை 7.00 மணிக்கு Brent Town Hall, Forty Lane, Wembley இல் நடைபெறும். நடனம், நாடகம், வில்லுப்பாட்டு கவியரங்கம் ஆகியன மேடையேறவுள்ளன.

அனுமதி இலவசம்

## தமிழர் திருநாள்

TRAG, TRHA, TR-TEC இணைந்து வழங்கும் தமிழர் திருநாள் 25.1.92 மாலை 6.00 மணிக்கு The Graveney School Hall, 17 Welham Road, Tooting இல் நடைபெறவுள்ளது. இவ்விழா முத்தமிழ் விழாவாக இடம்பெறவுள்ளது. அனுமதி இலவசம்

## மாவீரர் தின விழா

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தின விழா எதிர்வரும் 2.2.1992 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு Wandsworth Town Hall, Wandsworth High Street, London SW18 இல் நடைபெறும். விடுதலைப்பாடல்கள், வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம், கவயரங்கம், நாடகக் கோர்வை இன்னும் பல சுவைமிகு அம்சங்கள் இடம்பெறவுள்ளன.

## மகாசிவராத்திரி விழா

2.3.92 அன்று உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில்(Highgate Hindu Murugan Temple) மகாசிவராத்திரி விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. நான்கு சாமப் பூசைகளின் போது நடனம், பாடல்கள், சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளன. மகாபிரசாதமும் வழங்கப்படும்.

---

இம்மலரில் பிரசுரமாகும் நிரந்தரத் தாய் சிறுகதை அலை ஓசையின் 7வது வருட நினைவாகப் பிரசுரமாகின்றது. இச்சிறுகதை எமது முதல் வருட மலரில் பிரசுரமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

– ஆசிரியர் –

இவைகள் தாம் . படிப்பு ஏழாம் வகுப்பு , வயது முப்பது, விளையாட்டுக்களில் நல்ல அனுபவம் உயரம் நான்கடி ஒன்பதங்குலம் , முன் அனுபவம் தேவையில்லை.

இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் ஏமாந்து போனார்கள். மனேஜரின் மைத்துனருக்கு இப்பதவி போயிற்று. ஊர் சுற்றித் திரிந்த அந்தத் தடியனுக் குள்ள தகைமைகள் இப்பொழுது புரிகிறதா – போ போ உன் வேலையைப் பார் எனப்பிடரியில் பிடித்துத் தள்ளாத குறையாக விரட்டினான் நண்பன்.

தலையைச் சொறிந்து கொண்டே சோமுவின் தந்தையின் முன்னால் போய் நின்றான் மூர்த்தி. 'அடடே மூர்த்தியா ஆளை அடையாளம் காண முடிய வில்லையே , வா அப்பா உட்கார் !' என வரவேற்றார் சோமுவின் அப்பா. அவரது உபதேசம் ஆரம்பிக்கு முன்னரே ஆரம்பித்து விட்டான் மூர்த்தி.

உங்கள் நண்பர் கடவுள் பக்திக்காரர் என்றீர்கள், அவருக்கு என்மீது பற்றுதல் ஏற்பட ஆசார சீலனாக' இன்டர்வியூ' வுக்குச் சென்றேன். அப்படியும் வேலை கை நழுவிப் போய்விட்டதே ! அலங்கோலமாக முடி வளர்த்த'சைட் பேண்ஸ்' ஒருவனுக்கல்லவா வேலை கிடைத்துவிட்டது !" என்று மெல்ல தன் ஆற்றாமையை வெளியிட்டான் மூர்த்தி.

அவனது பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சோமுவின் அப்பா நிமிர்ந்து உட்கார்ந்தார். பின்னர் கூறினார். ' உன்னை என் நண்ப ருக்குப் பிடித்துத்தான் இருந்தது '. ஆனால் அவரது பி.எ.க்குப் பிடிக்க வில்லையே !

' அங்கேயும் பி.எ. தர்பாரா – ' வெறுப்போடு கேட்டான் மூர்த்தி. இல்லை அப்பா எனது மனேஜர் நண்பரது பி.எ. அவருக்கு நெருங்கிய உறவுக்காரி விவாகமாகாதவள் இவளுக்கு பொருத்தமான வரனைத் தேடுவதற்குத் தான் இப்படியொரு இன்டர்வியூ நாடகமாடியிருக்கிறார் எனது நண்பர் ! ' என்றார் சோமுவின் அப்பா.

இப்படியும் ஒரு இன்டர்வியூ வா என அதிர்ந்து போய் நின்றான் மூர்த்தி என்ற சுந்தரமூர்த்தி !

## இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகளுக்குத் தற்காலிக அட்டை

சுயவிருப்பத்தின் பேரில் இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகளுக்குத் தற்காலிக அட்டை வழங்கப்படும் எனப் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

## பூசாத் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம்

பூசாத் தமிழ்க் கைதிகள் தம்மை விரைவில் விடுதலை செய்யவேண்டுமெனக் கோரி புதன் மாலை முதல் உண்ணாவிரதம் ஆரம்பிக்கவுள்ளனர்.

## யாழ் பல்கலைக்கழகம் மூடப்படமாட்டாது.

யாழ் பல்கலைக்கழகத்தை மூடும் எண்ணமோ அல்லது இடமாற்றம் செய்யும் திட்டமோ அரசுக்குக் கிடையாது என கல்வி அமைச்சர் கமீது தெரிவித்துள் ளார்.

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையில் நிரந்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் கூட இல்லை! சபையில் முறைப்பாடு

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையில் ஒரு நிரந்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளர் கூட இன்று இல்லை. இந்த நிலையை நீக்க உடன டியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## திருக்கோயிலில் 200 பேர் கைது

கிழக்கில் பொலநறுவை, வெல்லவாய பகுதிகளிலும் திருமலையிலும் புலிகள் பலம் அடைந்து வருகின்றனர். இவற்றினால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் திருக்கோயிலைச் சுற்றி வளைத்து 200 பேரைக் கைது செய்து 60 பேரை முகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளனர். தம்பகாமத்தினை லக்வியேகம என சிங்கள பெயராக மாற்றி அங்கு அரசு குடியேற்றிய ஊர்க்காவல் படையினர் 5 தமிழ் பொது மக்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

## தமிழீழத்திற்கு எதிரான யுத்தத்தில் 1570 கோடி இலங்கைக்குக் கடந்த ஆண்டு செலவு

கடந்த நிதியாண்டில் 1170 கோடி ரூபாவை இலங்கை அரசு பாதுகாப்புச் செலவுகளுக்கென ஒதுக்கியது. ஆனால் ஆனையிறவுப் போரை அடுத்து அவசரம் அவசரமாக 400 கோடி ரூபா மேலதிகமாகத் தேவையாக உள்ளது என திறைசேரியிடம் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வடபகுதியில் விமானக் குண்டு தாக்குதல்கள் !

யாழ்.குடா நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்களினால் பல வீடுகள், கட்டிடங்கள் சேதம் அடைந்ததுடன், பொதுமக்கள் பலர் காயம் அடைந்த தாகவும் அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே மேற்கொள்ளப்பட்ட ஆகாய மார்க்கமான தாக்குதல்களினால் ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டி, சாவகச்சேரி, பொலிகண்டி ஆகிய பகுதிகளிலேயே சேதங்கள் ஏற்பட்டு உள்ளன.

## மருந்து இன்மையால் நோயாளி தற்கொலை

சிங்கள அரசின் பொருளாதாரத் தடை காரணமாக மருந்து இல்லாத நிலை யாழ் ஆஸ்பத்திரியில் தோன்றியுள்ளது. விசுவமடுவைச் சேர்ந்த ஐயாசாமிவேலு என்பவர் சிறுநீரக வருத்தத்தினால் யாழ் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டிருந்தார். வேதனையைத் தாங்க முடியாமல் மருந்தும இல்லாமல் தவித்த இந்நோயாளி சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார். இதற்கிடை யாழ்ப்பாணத்தில் போசாக்கில்லாத ஒரு குழந்தைகள் சமுதாயம உருவாகி வருகிறதெனவும் உடன் நடவடிக்கை எடுக்கத்தவறின் ஊனமான சமுதாயமாக அவர்கள் மாறும் ஆபத்து உண்டெனவும் சுற்றாடல அலுவல்கள் அமைச்சின் செயலாளரும் மேலதிக அத்தியாவசிய சேவை ஆணை யாளருமான தேவநேசன் நேசையா தெரிவித்து உள்ளார்.

## வடபகுதியில் பெரும் உணவு நெருக்கடி,

வடபகுதியில் உணவு நெருக்கடி, குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு என்பவற்றை நீக்கக்கோரி மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதாகவும், இதில் தீவுப்பகுதி களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தஞ்சமடைந்திருக்கும் பெண்கள் கைக்குழந்தைகள் சகிதம் பெருமளவில் கலந்து கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இவர்கள் வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்கக்கோரி மகஜர் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு கச்சேரியில் கையளித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. வடபகுதியில் மோதல்கள் வெடித்ததைத் தொடர்ந்து அதன் தாக்கத்தால் பெருமளவு நொந்து போயுள்ளவர்கள் விசேடமாகப் பெண்களேயாவர்.

## லலித், காமினி உட்பட எட்டு எம்.பி.க்களையும் ஐ.தே.க. செயற்குழு வெளியேற்றியமை சரியானதே !

கட்சியின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீறியதாகக் குற்றஞ்சாட்டி ஐ.தே.க. அதிருப்தியாளர்களான காமினி, லலித், பிரேமச்சந்திரா உட்பட எட்டு எம்.பி.க்களை கட்சியிலிருந்து ஐ.தே.க. செயற்குழு வெளியேற்றியது செல்லுபடியானதே என்று உயர்நீதி மன்றம் 3.12.91 அன்று தீர்ப்பளித்தது.

## வவுனியாவில் 250 பேரை காணவில்லை

தமிழ்த்துரோகக்குழுக்களும் சிங்கள இராணுவமும் நிலைகொண்டுள்ள வவுனியாப் பகுதிகளில் இவ்வருடத்தில் மட்டும் 250 பேர் காணாமல் போயுள்ளனர்.

## " தொண்டமானின் ஈழம் யோசனை " பௌத்த பிக்குமார் போர்க் கொடி!

இனப்பிரச்சினை தீர்வுக்கான அமைச்சர் தொண்டமானின் யோசனைகளில் 'ஈழம்' என்ற பெயர் மட்டுமே இல்லை. ஆனால் அந்த யோசனைகள் தனி அரசு ஒன்றை அமைப்பதற்கே வழிவகுக்கிறது. பௌத்த சாசனத்துக்கும் பௌத்த சமய விவகாரங்களுக்குமான நடவடிக்கைக் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "யோசனைகளை அரசு நிராகரித்தாலும் யாழ்ப்பாணம் வாருங்கள்" தொண்டமானுக்கு புலிகள் அழைப்பு

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான அமைச்சர் திரு தொண்டமானின் யோசனைகளை அரசாங்கமோ எதிர்கட்சிகளோ ஏற்றால் என்ன நிராகரித்தால் என்ன அமைச்சர் தொண்டமான் தாராளமாக யாழ்

வந்து எம்முடன் பேச்சு நடத்தலாம்.

அமைச்சர் எம்முடன் பேசசு நடத்துவ தோடு யாழ். வந்து எமது மக்களின் இன்றைய அவல நிலையையும் நேரில் பார்வையிடலாம்.

மேற்கண்டவாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசர் திரு.அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

## வடக்கில் வங்கிகள் இயங்குகின்றன

வடக்கில் மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு கிளைகளையும் இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக்கிளைகளையும் தவிர ஏனைய சகல கிளைகளும் இயங்குகின்றன.

## முல்லைத்தீவில் கடும் மோதல்

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாயில் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற பெரும் மோதலில் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் 17 பேர் பலியானதாகவும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

## "பயமுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டேன் யாழ். பயணத்தில் மாற்றமில்லை" அமைச்சர் தொண்டமான் உறுதி

"தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக நான் யாழ்ப்பாணம் சென்றால் புலிகள் என்னைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பார்கள் என எனக்குப் பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. நான் எதற்கும் அஞ்சப் போவதில்லை. இதற்காக தைப்பொங்கலுக்குப் பின்னர் யாழ். செல்லும் எனது திட்டத்தை நான் மாற்றப்போவதும் இல்லை" அமைச்சர் திரு.எஸ்.தொண்டமான் இவ்வாறு கொழும்பில் தெரிவித்தார்.

# இலங்கையின் தாயகவாதக் கோரிக்கையில் தமிழர்கள் என்பதன் சொல்லாட்சியும், பிரயோகமும் ஒரு மறுப்பியல் ஆய்வு.

பா.பரராசசேகரம்

இலங்கையின் சமகால தேசியப் பிரச்சனைகளுள் வடகீழ் பிரதேச தாயக வாதம் முக்கியமானதும் , சர்வதேச கவனத்தை ஈர்த்ததுமாக இருந்தது. இதனாலே பேரினவாத சமாதான விரும்பிகளும், மற்றும் தேசிய நலனில் அக்கறை கொண்டோரும் அவசியமாகவும், அவசரத்திலும் இதைத் தீர்க்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டினர்.ஆனால் அரசினரோ கொள்கை வகுப்பாளர்களின் தவறான முடிவுகளின் படி இராணுவ நடவடிக்கையில் முனைப்பைக் காட்டியது பல்வேறு சிக்கல்களைத் தோற்று வித்தது. இங்கு பிரச்சனைக்கான ஏதுவைப்பற்றி அறிவதும், அதன் வழியில் பிரச்சனையை அணுகுவதுமே புத்திசாலித்தனமாக இருந்தது. இங்கோ வேறுவிதமாகப் பிரச்சனையின் தன்மையைத் திசை திருப்ப பிரிவினைவாதம், பயங்கரவாதம் என வாய்கிழியக்கத்துவதிலும், இந்திய விரோத உணர்வுகளைக் கோஷிப்பதிலுமே செலவிட்டனர். தவிர பிரச்ச னைக்கான பரிகாரத்தேடலிலும் பரிகாரம் தருபவர்கள் இதய சுத்தியோ, யதார்த்த நோக்கோ கொண்டு செயலாற்றவும் தயக்கம் காட்டினர்.

வடகீழ் இலங்கையின் தாயகவாதக் கோரிக்கையில் தமிழர்கள் என்ற சமூகச் சொற் பிரயோகத்தின் பரிமாணமும் முக்கிய ஒரு விடயமாகும். இங்கு தாயகவாதப் போராட்ட வழியில் இனமுரண்பாடோ இன்றேல், பிரிவினை உணர்வோ இருக்கவில்லை. இது மொழிரீதியாக இணைக்கப்பட்ட பூகோளத் தொடர்ச்சியும், வரலாற்றுப் பாத்தியத்தையும் கொண்ட ஒரு பிரதேச தேசியவாதத்தின் அடையாளத்துவ நிகழ்வாகும். இந்த வகை யில் மொழியும், நிலமும் பிரச்சனையின் இரு முக்கிய முனைப்பாக இருப் பதைக் காண்கிறோம். ஆனால் பரிகாரம் தர பாதிப்புற்றோர் கோரிக்கை பிரிவினை அல்ல பிராந்திய தேசியவாதத்தின் சுய நிர்ணயமுனைப்பே வேண்டியவர்கள் பிரச்சனையின் யதார்த்தத்தைப் புறக்கணித்து இனவாதம், பிரிவினை வாதம், பயங்கர வாதம் போன்ற நாம பஜனைகளைத் தினமும் உச்சாடனம் செய்வதிலேயே கண்ணாயினர். இது பிரச்சனையின் தன்மையை மலினப்படுத்தும் பிரச்சார உத்தியேயன்றி மெய்மையின் வெளிப்பாடாக இருக்கவில்லை.

பிரதேச தேசியவாதம் சம்பந்தப்பட்டதில் பரிகாரம் தரவேண்டியவர்கள் அரசாகவும், பாதிப்புற்றோர் தமிழர்களாகவும் உள்ளனர். இங்கு தமிழர்கள் என்பது வெறுமனே தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட திராவிட இனத்தின் ஒரு சாராரை மட்டும் கருதவில்லை. மத, மற்றும் கலாச்சார, வாழ்வியல் முறைகளில் வேறுபட்ட சோனக சமூகத்தையும் உள்ளிட்டதாகும். திராவிடர் தமிழ்ப்பிரிவினர், சோனகர் ஆகிய இரு அலகுச் சமூகங்களும் வடக்குக் கிழக்குச் சேர்ந்தாற் போன்ற தொடர்ச்சியான நிலப்பரப்பில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வருகின்றனர். இவர்களது சமூக வதிவிடப் பரம்பலை நோக்கின் பிட்டும், தேங்காய்ப்பூவும் போன்ற அடுத்தடுத்த அயலுறவும் பேணப்பட்டு வந்திருக்கின்றது. தவிர தமிழ் மொழியே இரு சமூகத்தவரின் பொதுவான ஊடகமாகவும், தாய் மொழி தமிழர்கள் என்பது மொழி இணைப்பிலான பொதுக்குறியீடேயன்றி இனக்குறியீடு அல்ல. இலங்கையில் தமிழர்கள் என்பதை இனத்தைச் சுட்டும் குறியீடாகக் கொள்ள முடியாது. மொழியும் நிலமும் சம்பந்தப்பட்ட இரு சமூகங்களை குறிக்கும் பொதுக் குறியீடாக கருதுவதே நடைமுறைப்பயன் தருவதாகும்.

மானிடவியல் அணுகு முறையில் இனம் என்பதைத் தீர்மானிப்பது மொழி அல்ல. இரத்த உறவு, நிறம், அவயவங்களின் அமைப்பு மாதிரி, மரப வழி ஒழுகலாறுகள் போன்றவையே. இந்த வகையில் இலங்கையின் இனப்பரம்பலை நோக்கின் ஆரியர்(சிங்களவர்), திராவிடர்(தமிழவர், மலையாளிகள்), அராபிய வழியினர்(சோனகர்), ஐரோப்பிய பரம்பரையினர்(பறங்கியர்) , மொங்கோலிய மரபினர்(மலாயர்,சீனர்) என அடையாளங் காணலாம். ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனையைப் பொறுத்தவரையில் ஆரியர், திராவிடர் பற்றிய முரண்பாடு இருக்கவில்லை. கணிசமான அளவில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம் சகோதரர்கள் சம்பந்தப்பட்டதுமாகும். இங்கு அரசினரோ பிரச்சினையின் பாதிப்புற்றோர் பரிமாணத்தைக் குறைக்க இதைத் திராவிடர் பிரச்சினையாகக் காட்ட எத்தனித்தது வேடிக்கையானதாகும். இது பிரச்சினையின் தேசிய பரிமாணத்தைச் சிறுமைப்படுத்தவும் , சர்வதேச அனுதாபத்தைத் தம்பால் ஈர்க்கவும் மேற்கொள்ளப்பட்ட வெறும் விளம்ப ர உபாயங்களே என்றால் மிகையாகாது. எனவே பிரதேச தேசிய வாதம் மொழி உரிமைப்பாதிப்பில் உருவானது என்ற வகையில் தமிழர்கள் என்பது

மொழி இணைப்பால் இணைந்த இரு சமூகத்தவரதும் சேர்க்கையையே கருதுவதாகும்.
வடகீழ் தாயகவாதக் கோரிக்கைக்குக் களம் அமைத்த இன்னொரு விடயம் அரசினரின் குடியேற்ற நடவடிக்கையாகும். இதனால் பிரதேசம் என்பது இரு கலாச்சாரப் பிரிவினரையும் ஒரே சமூக அலகினுள் உட்படுத்தி நிற்பது எமது கவனத்தை ஈர்ப்பதாகும். அரசினரின் காணிப்பூட்கை ஒரு வகையில் நவீன குடியேற்ற வாதத்தின் நடத்தையாகும். இது சமீப காலம் வரை இடம் பெற்று வரும் பாலஸ்தீன, தீபெத்திய பிராந்தியங்களின் யூத, சீன குடியேற்றங்களை ஒத்தவையாகும். இவற்றின் போக்கிலே திட்டமிட்ட குடியேற்றங்களை வடகிழக்குப் பகுதிகளில் பரவலாக மேற்கொண்டனர். முக்கியமாக சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவ பங்கின் பெலத்தினைக் குறைக்க இவ்வித குடியேற்றங்கள் ஊடாக திகாமடுல்ல, செருவில தொகுதிகள் உருவாகின. தவிர் வடபகுதியிலும் வெலிஓயா என்ற பெயரில் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்த திரை மறைவில் நடைபெற்று வந்த முயற்சி அம்பலத்திற்கு வந்துள்ளதும் இவ்வகையானதே. மேலும் மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா மாவட்ட நிருவாக ஆள்புல எல்லைகளும் காலத்துக் காலம் செயற்கையான முறையில் மாற்றப்படுவதும் சர்வ சாதாரணமாகி வருகிறது.
இதே விதமாக முஸ்லிம் சகோதரர்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகள் தீகவாவிப் பகுதிகளில் பறிக்கப்பட்டன. இந்த வகையில் பிரதேசவாதம் திராவிட, சோனக கலாச்சாரக் கூறுகளைத் தமிழர்கள் என்ற ஒரே சமூகக் கூட்டமாகக் கொள்வதைக் காண்கிறோம்.

முடிவாக வடகிழக்குப் பிரதேச மொழிவாரிச் சமூகத்தினரின் தாயகவாத நிலைப்பாடு அநாதியானது. நிலைநிறுத்தப்பட்டது. எனவே இலங்கை அரசு இவ்வாறான பிரதேசவாத விருப்புக் கோரிக்கையினை நியாயமான ஒரு விடயமாக முதலில் கொள்ள வேண்டும். மாறாக பயங்கரவாதம், பிரிவினை வாதம் போன்ற சொல்லாட்சிகளை இது விடயத்தில் தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது. பரிகாரம் தருவதிலும் மாற்றாந்தாய் மனப்பான்மையில் இருத்தலாகாது. இதய சுத்தியுடனும், தூரகால தேசிய நோக்குடனும் செயற்பட வேண்டும். வெறும் ஒப்புதல்களும், உயிரற்ற சட்ட ஆக்கங்களும் பயன் தருவதற்கில்லை. அவை செயல்வடிவம் பெறவேண்டும். நடைமுறைப்படுத்தலும் உடன் தொடரவேண்டும். அப்போதே பிரதேச வேறுபாடற்ற தேசிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப வழிகோலும் என நம்பிக்கை கொள்ளலாம்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல -19

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 |
| 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 | 62 | 63 | 64 |

<u>மேலிருந்து</u> <u>கீழ்</u>

*1. இது கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா என்பர் பெரியவரகள்.*

*4, யாழ்ப்பாணத்தில் பெருமளவு பயிராகும் ஓர் பயிர்.*

*8. தான் செய்த பிழையால் கம்பி எண்ணியே காலத்தைக் கழிப்பவன்.*

*13. கண்ணபிரான் இவனை அழித்த நாளே தீபாவளியாகும்.*

*18. தமிழ்க்கடல் நக்கீரர் ஒரு ..................*

*23. இது தொழுவது சாலவும் நன்று.*

25. குங்குமம், மஞ்சல், மலர் இவை இதற்கு அறிகுறியானவை.

38. திருதராட்டினனின் முதன்மந்திரி இங்கே குழம்பியுள்ளார்.

40. அடி மேல் அடி வைத்தால் இதுவும் நகரும்

44. திருநீற்றின் மறுபெயர் குழம்பி உள்ளது.

## <u>இடமிருந்து வலமாக</u>

1. மன்மதனின் வில் இதனுலானது.

6. விசுவாமித்திரரைத் தன்வசமாக்கியவள்.

18. ஆள்காட்டி சரிந்ததும் இது புறப்படும்.

28. ஆழமறியாது இதனை விடாதே இங்கு குழம்பி உள்ளது.

31. இம்மாதத்தில் திருமணங்கள் நடப்பதில்லை.

44. திரைகடலோடியும் இதனைத் தேடு.

57. தென்னுலிராமன் இதற்கென்றே பிறந்தவன். குழம்பியுள்ளது.

62. இம்மேகத்தைக் கண்டால் கானமயிலுக்குக் கொண்டாட்டமாம். (குழம்பியுள்ளது)

# நிரந்தரத் தாய்

விம்பிள்டென்னில் உள்ள கந்தையாவின் வீட்டில் ஒரே அமர்க்களமாயிருந்தது. அவர் மகள் மாலதியைப் பெண் பார்க்க வருகிறார்கள். இம்முறையாவது இந்தச் சம்பந்தம் சரியாக அமைய வேண்டுமென ஆண்டவனை வேண்டிக் கொண்டார் கந்தையா.

என்ன குறை, அழகாகவே இருக்கிறாள். அமைதியான சுபாபம். அடக்கமா பேச்சு. தனது பேச்சினால் பிறரைக்கவரக் கூடிய ஆற்றல் பொதுவிலே பெண்களுக்குரிய எல்லா இயல்புகளும் இருந்தது மாலதியிடம். ஒரு குறையைத் தவிர. இத்தனைக்கும் அவள் செயின்ஸ் ஜோர்ஜ் ஆஸ்பத்திரியில் நார்சாக வேலை பார்த்து வருகிறாள்.

வாசலில் கார் வந்து நிற்பதை ஜன்னல் வழியாக அவதானித்த கந்தையா மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து விட்டார்கள் என்று குரல் கொடுத்துக் கொண்டே போய் கதவைத் திறந்து அவர்களை வரவேற்றார். மாப்பிள்ளை வீட்டுக்காரரும் உள்ளே வந்து சோபாவில் அமர்ந்தார்கள். மணமகன் சேகர் சினிமாவில் கதாநாயகன் போன்று தோற்றத்தையுடையவனாகவும் கட்டான உடற்கட்டும் கவர்ச்சியான தோற்றத்துடனிருந்தான். சிவந்த மேனியையுடைய சேகருக்கு நீலநிற சேட்டும் அதே கலர் ரவுசரும் அவனது அழகை மேலும் மெருகூட்டின. கந்தையாவுக்கும் நன்றாகப் பிடித்துவிட்டது சேகரை. ஆனால் மாப்பிள்ளை வீட்டுக்காரர்தான் என்ன சொல்கிறார்களோ தெரியவில்லை என்று ஏங்கிக் கொண்டிருந்தார். மாலதியும் மணமகளாக அலங்கரிக்கப்பட்டு அழகு தேவதையாக அவர்கள் முன் காட்சியளித்தாள். பின் தேனீரும் சிற்றுண்டியும் பரிமாறப்பட்டது. பெண் பார்க்கும் படலமும் முடிந்தது.

பெண்ணை எமக்கு நன்றாகப்பிடித்துவிட்டது. சீதனம் சீர்வரிசை எதையும் நாங்கள் எதிர்பார்க்க வில்லை. எந்தவித ஆடம்பரமும் இன்றிக் கல்யாணத்தை அமைதியான முறையில் நடத்துங்கள். நாங்கள் போய் முகூர்த்தத்திற்கு ஒரு நல்ல நாளாகப் பார்த்து போன் பண்ணுகிறோம் என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள்.

ஆனால் மாலதிக்கோ ஒரே அதிர்ச்சியும் ஆச்சரியமுமாயிருந்தது.

என்ன செய்வது கடவுள் யாரையுமே விட்டு வைக்கவில்லை. ஒவ்வொருத்தர் வாழ்விலும் ஒவ்வோர் குறையை கொடுத்துக் கொண்டேயிருப்பார். உங்களை எண்ணும் போது எனது குறை பெரிதாகத் தெரியவில்லை. மாலதியின் கண்கள் கலங்கின.

வீட்டுக்கு வரவேண்டும். என் பெண் குழந்தை உங்களைப் பார்த்தால் மிகவும் சந்தோசப்படுவாள் என்ற மோகனின் சிறிது நேர உரையாடலின் பின் விடைபெற்றுச் சென்று விட்டான்.

அடுத்த நாள் தன் குழந்தையை அழைத்துக் கொண்டு மீண்டும் மாலதியின் வீட்டிற்கு வந்தான் மோகன். ஆவலோடு எடுத்து அணைத்துக் கொண்டாள் மாலதி. சிறிது நேரத்தில் அந்தக் குழந்தை அவளிடமே ஒட்டிக் கொண்டது. தினமும் மாலதி வேலைக்குப் போகுமுன் மோகனின் வீட்டிற்குச் சென்று அந்தக் குழந்தைக்குத் தேவையானவற்றைத் தானே கவனித்து விட்டுத்தான் வேலைக்குச் செல்வாள். மோகனும் எத்தனையோ முறை ஏன் உங்களுக்கு வீண் சிரமம் என்று சொல்லியும் அவள் கேட்கவில்லை. தனக்கு அதில் ஓர் இன்பமும் நிம்மதியும் இருப்பதாகக கூறுவாள் மாலதி.

இப்படியே நாட்கள் பல கடந்தன. ஒரு நாள் மாலதி வழக்கம் போல அக்குழந்தையைக் குளிப்பாட்டி விட்டு அதற்குத் தேவையானவற்றை கவனித்துவிட்டு அக்குழந்தையுடன் விம்பிள்டென் பாக்கிற்குச் செல்லப் புறப்பட்டாள். அப்போது மோகன் அங்கு வந்து கொஞ்சம் நில்லுங்கள் மாலதி உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் தப்பாக நினைக்க மாட்டீங்களே எனத்தயங்கினான் மோகன்.

கேள்வியா என்னிடமா, தாராளமாகக் கேளுங்கள் நான் என்ன புதியவளா ? இத்தனை நாளும் நண்பராகப் பழகிய பின்னும் ஏன் இந்தத் தயக்கம் என்று கேட்டாள்.

வந்து.... வந்து நீங்கள் என் குழந்தைக்கு நிரந்தரத் தாயாக இருக்க முடியுமா? என்று கேட்டுத் தன் தலையைத் தாழ்த்திக் கொண்டான் மோகன்.

அதிர்ந்தாள் மாலதி. என்ன கேள்வி கேட்டீர்கள் நான் அர்ச்சிக்கப்பட்ட மலர் மீண்டும் அர்ச்சனைக்கு உபயோகிக்க முடியாது.

கந்தையா கனவிலும் நினைத்து இருக்கவில்லை இப்படியொரு சம்பந்தம் மாலதிக்குக் கிடைக்கும் என்று இப்படி ஒரு குறைபாடு உள்ள எனக்கு இப்படி ஒரு அதிஸ்டமா? என்று வியந்தார். அவளை மணக்க இருந்த சேகர் பெற்றோல் நிலைய ஏரியா மனேஜராக இருந்தான். அவனது பெயருக்கேற்றாற் போல நல்ல குணமும் அழகும் பொருந்தியிருந்தது.

அவனிடம் கட்டான உடலமைப்பு கம்பீரமான நடை பிறர்க்கு உதவி செய்யும் மனப்பான்மை எல்லாம் அவனிடமிருந்தன. சேகர் தனது ஒய்வு நேரங்களில் சமூகசேவை செய்வதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பான். அண்மையில் கூட இலங்கையிலிருந்து அனேகமான தமிழர்கள் அரசியல் அடைக்கலம் கோரி வந்த போது சேகரே முன்னின்று அவர்களுக்கு உதவி செய்து வந்தான். இத்தனைக்கும் சேகர், அகதிகள் புனர்வாழ்வு குழுவொன்றுக்குவேலை செய்வதாகக் கூறப்படுகின்றது. குழுவில் ஒரு அங்கத்தவனாக இருந்து அதன் மூலம் தமிழர்களுக்குப் பல உதவிகளைச் செய்து வந்தான். மாலதிக்கும் சேகரை நன்றாகப் பிடித்துவிட்டது எனினும் மாலதி தனது கடந்தகால வாழ்க்கையை ஒருமுறை திரும்பிப் பார்க்கிறாள்.

அந்தத் துயரமான சம்பவம் அவள் இலங்கையிலிருந்த காலத்திலே நடந்தது. அன்று அவள் ஒரு இன்ரவியுவுக்காகக் கொழும்பு சென்று விட்டுத் திரும்பும் வழியிலே தான் அந்தத் துயரமான சம்பவம் நடந்தது. அப்போது யாழ்ப்பாணம் கொழும்புக்கான புகையிரதச்சேவை தடைப்பட்டிருந்ததால் மாலதி தனியார்துறை பஸ்மூலம் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போது இரவுநேர பிரயாண மாகையால் பஸ்வண்டி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. அப்போது சுமார் மூன்று மணியிருக்கும் வவுனியாவை அண்மித்துக் கொண்டிருந்த போது திடீரென ஆயுதம் தாங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பஸ்சை இடைமறித்து அதில் இருந்தவர்களைக் கீழே இறக்கி அவர்களது சொத்துக்களைச் சூறையாடிவிட்டு இறுதியில் அனைவரையும் தமது துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கினார்கள்.

காட்டிலே மிருகங்களை வேட்டையாடுவது போல அவர்களை வேட்டையாடினார்கள். அந்த இடத்தில் இரத்த வெள்ளம் பாய்ந்தோடியது. வெடிச்சத்தம் கேட்டவுடன் மாலதி மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். அதன்பின்னர் காமவெறி பிடித்த இராணுவத்தினர்

மாலதியையும் இன்னும் சில யுவதிகளையும் தமது இராணுவ வாகனத்தில் ஏற்றிச் சென்று அவர்களது கற்புகளைச் சூறையாடிவிட்டு அவர்களை ஒருகாட்டுப் பகுதியிலே அனுதரவாக விட்டுச் சென்றுவிட்டார்கள். மயக்கம் தெளிந்து எழுந்த மாலதிக்கு அதன் பிறகு தான் தெரியும் தனது கற்பு சூறையாடப்பட்டதென்று.

திருமணத்திற்காக நாளும் நெருங்கிக் கொண்டிருந்ததால் மாலதி தனது ஆஸ்பத்திரி வேலைக்கு லீவு போட்டு விட்டுத் திருமணத்திற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள். எந்தவித ஆடம்பரமுமின்றி அமைதியான முறையிலே விம்பிள்டன் பிள்ளையார் கோவிலில் வாகீஸ்வரக் குருக்களினுல் நடத்தி வைக்கப்பட்டது. அதிகமானோர்க்கு அறிவிக்காத போதிலும் கந்தையாவின் உறவினர்களும் சேகரின் நெருங்கிய நண்பர்களும் மற்றும் முக்கியமான தமிழ் பிரமுகர்களும் வந்து திருமணத்தை மேலும் சிறப்பித்தார்கள். பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் சேகரின் சொந்த இடமான டூட்டிங்கிற்குச் சென்றூர்கள். டூட்டிங் ஓர் அமைதியான இடம். தமிழர்கள் அதிகமாக வாழும் இடமும் கூட. அங்கே சேகர் புதிதாக வாங்கிய வீட்டில் குடியிருந்தான். அவர்களின் புதிய வாழ்க்கை ஆரம்பமாகியது.

இத்தனை அழகான நீங்கள் கற்பிழந்த என்னை எப்படி உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கத் துணிந்தீர்கள் என்று கேட்டாள் மாலதி.

கற்பு என்பது உடலில் இருக்க வேண்டியது அல்ல. இதயத்தில் இருக்க வேண்டியதும் கூட. ஏன் பெண்களுக்கு மட்டும் தானு கற்பு என்பது ஏன் ஆண்களுக்கில்லையா? ஒரு ஆண்மகனினுல் ஒரு பெண் கற்பிழக்கப்படுகிறுள் என்றுல் அந்த ஆணும் கற்பிழந்தவனுகிறுன். பாரதியாருக்கு நூற்றுண்டு விழா எடுக்கும் நாம் ஏன் அவன் கொள்கைகளை ஏற்பதில்லை. இதற்குப் பாரதியாரே கூறுகின்றூர், கற்பு என்பது அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம் என்று கூறுகிறுர். சரி அப்படித்தான் கற்பிழந்தாலும் அவர்கள் வாழக்கூடாதா? ஆனுல் உனது நிலைவேறு அரசபயங்கரவாதிகள் என்று கூறப்படுகின்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கற்பிழக்கப்பட்ட உன்னை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்பதன் மூலம் வாழ்விழந்த ஒரு தமிழ் பெண்மணிக்கு வாழ்வு கொடுத்தவன் என்று மகிழ்ச்சி மட்டுமல்ல தமிழ்ச்

சமுதாயத்திற்கு நான் செய்யும் மாபெரும் சேவையாகக் கருதுகின்றேன்.

அத்துடன் அழகையோ அல்லது பணத்தையோ நான் பெரிதாக மதிக்கவில்லை. அன்பு, அடக்கம், பரிவு, பண்பு, நேர்மை, கட்டிய கணவனுக்குக் கனவிலும் கூடத் துரோகம் நினைக்காத பரிசுத்தமான தூய்மையான உள்ளத்தையே நான் எதிர்பார்க்கிறேன். இவைகள் அனைத்தும் உன்னிடத்தில் இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் உன்னை மணக்கச் சம்மதித்தேன் என்றான்.

என் போன்ற எத்தனையோ தமிழ்ப் பெண்களின் கற்பு கொடிய இராணுவத்தினால் சூறையாடப்படுகின்றது. அவர்களுக்கெல்லாம் இப்படியான வாழ்க்கை அமையும் என்பதில் என்ன நிட்சயம் ? எல்லோர்க்கும் சேகரைப் போன்ற நல்ல மனப்பான்மை இருந்தால் எமது சமுதாயத்தில் கற்பிழந்தவர்கள் கற்பழிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை ஒளிமயமாக இருந்திருக்கும். அவர்களும் வாழாவெட்டியாக இருந்திருக்க மாட்டார்கள். ஒரு பெண் எதனையிழக்கக் கூடாதோ அதனையே தனக்கு மறுவாழ்வு கொடுத்துத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்ட சேகரைமானிட வடிவில் வந்த தெய்வமாக கருதினாள் மாலதி. கணவனின் தேவையினை உணர்ந்து சேவை செய்யும் ஒரு குடும்பப் பொறுப்புமிக்க பெண்ணாக இருந்தாள் மாலதி. இருவருமே உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்ததால் வீட்டு வேலைகளில் சேகரும் மனைவியுடன் இணைந்து உதவிபுரிந்தான். காலையிலே சேகர் வேலைக்குப் போகும் போது தனது காரிலேயே ஏற்றிச்சென்று மாலதியை அவளது ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்டுத் தனது வேலைக்குப் போவது வழக்கம். இப்படியே அவர்களின் குடும்ப வாழ்க்கை இனிமையான முறையிலே நடந்து கொண்டிருந்தது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி ஓராண்டும் நிறைவு பெற்றது. அப்போது தான் அவர்களது அமைதியான வாழ்விலே புயல் வீச ஆரம்பித்தது.

வழக்கம் போல அன்றும் இருவரும் சேர்ந்தே காரில் வேலைக்குப் புறப்பட்டார்கள். மாலதியை அவளது ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்டு தனது அலுவலகத்திற்குச் சென்றான். அன்று பதினொரு மணியளவில் சேகருக்கு தாங்க முடியாத நெஞ்சு நோவு ஏற்பட்டதால் உடனடியாக மினிகப் மூலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டான். பின்னர் இதுபற்றி மாலதிக்கு ரெலிபோன் மூலம்

செய்தி தெரிவிக்கப்பட்டது. மாலதி ஒருகணம் நிலை குலைந்தாள். ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டு சென்றாள். எனினும் அங்கே அவள் கண்டதோ சேகரின் உயிரற்ற உடலைத்தான்.

பிறந்த வீட்டிற்கே மாலதி திரும்பவும் வந்து ஒரு வருடமாகிவிட்டது. இத்தனை நாட்களும் தன்னைச் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் பார்த்தவர்கள் இப்போது பரிதாபக்கண் கொண்டு நோக்குவது போன்று அவளுக்குத் தோன்றியது. எதிர்வீட்டிலே யன்னல் வழியாக ஒரு தமிழ் இளைஞனின் முகம் தெரிந்தது. அது இன்று நேற்றல்ல பல நாட்களாகவே அவனது பார்வை தன்மேல் விழுவதாக மாலதி உணர்ந்தாள். அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மாலதி தனது யன்னல்க் கதவைப் படார் என்று அடித்துச் சாத்தினாள்.

அன்று மாலை கந்தையா கோலிலே பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். மேல் மாடியில் தனது அறையில் ஏதோ வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாலதி தந்தை தனது பெயரைச் சொல்லி அழைப்பதை கேட்ட மாலதி வீட்டிற்குள் வந்த போது திடுக்கிட்டாள். எதிர்வீட்டு இளைஞன் அங்கே அமர்ந்திருந்தான். அவன் ஏன் எங்கள் வீட்டிற்கு வந்தான்? இதற்கு முன்னர் யன்னல் வழியாகப் பார்ப்பவன் இப்போது வீட்டிற்கே வந்துவிட்டான் போலிருக்கிறது. அவனை வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் போலிருந்தது மாலதிக்கு.

மாலதியின் தந்தையார் பேச்சை ஆரம்பித்தார். இவர் தான் நம் எதிர் வீட்டிற்குப் புதிதாக வந்திருப்பவர் பெயர் மோகன் இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. மனைவி ஓர் விபத்தில் இறந்து விட்டாள். தூரத்து உறவினரான ஓர் அம்மாவை வைத்துத்தான் குழந்தையைப் பராமரித்து வருகிறார்.

என்ன மனைவி ஓர் விபத்தில் இறந்துவிட்டாளா? அத்துடன் குழந்தையும் ஒன்று. ஆத்திரத்தோடு வந்தவளுக்கு மோகனின் மேல் ஒரு பரிதாபத்தையும் மதிப்பையும் கொடுத்து மௌனமானாள் மாலதி.

உங்களைப்பற்றி உங்கள் தந்தை என்னிடம் சொல்லியிருக்கிறார். கேட்கவே பரிதாபமாக இருக்கிறது. மாலதியின் மௌனத்தைக் கலைத்தது மோகனின் குரல்.

அப்படி நான் உங்கள் குழந்தைக்கு தாயாக மட்டும் ஆனாலும்.... நீங்களும் உணர்ச்சிகள் நிரம்பிய சராசரி ஆண்மகன் தானே. இனி நான் இந்த இடத்திற்கும் வர மாட்டேன் என்று அழுதுகொண்டே அந்த வீட்டை விட்டு வெளியேறினாள் மாலதி. மாலதி நான் சொல்வதைக் கேளுங்கள் போகாதீர்கள் என்று கூறியபடியே அவளைப்பின் தொடர்ந்து வீதியின் சிக்னல் லைற் எதையுமே பொருட்படுத்தாமல் வீதியைக் கடக்கும்போது வேகமாக வந்த கார் ஒன்று அவன் மீது மோதியது. சத்தம் கேட்டுத் திரும்பிய மாலதி மோகன் மேல் கார் மோதியதைக் கண்டு வீதிக்கு ஓடி வந்தாள். அங்கு மோகன் இரத்த வெள்ளத்தில் மிதந்தான்.

நினைவு இழந்த மோகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்து சென்றார்கள். கை, கால், முகம் போன்றவை காயங்களாக கட்டு போடப்பட்டன. குழந்தையை வைத்துக் கொண்டு அவன் கட்டிலருகே அழுதவாறே அமர்ந்திருந்தாள் மாலதி. சிறிது நேரத்தில் மோகனின் உதடுகள் மெல்ல அசைய ஆரம்பித்தன. அவன் ஏதோ சொல்ல ஆசைப்படுவதை உணர்ந்த மாலதி அவன் உதட்டருகில் சென்று அவன் கூறுவதைக் கேட்டாள்.

மாலதி என்னைத் தப்பாக நினைத்துவிட்டீர்களே. உங்களை என் குழந்தைக்கு நிரந்தரத்தாயாக மட்டும் தான் இருக்கச் சொன்னேனே தவிர எனக்கு மனைவியாக இருக்க வேண்டும் என நான் மனதில் கூட எண்ணவில்லை. அதைச் சொல்வதற்காகத் தான் உங்களைத் தொடர்ந்து ஓடி வந்தேன். என் குழந்தைக்கு ..... அதற்கு மேல் பேச முடியாமல் ஒவ்வோர் வார்த்தையாகப் பேசிய மோகனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. அவன் தலை தொங்கியது.

மோகன் என்னை மன்னியுங்கள் நிட்சயமாக உங்கள் குழந்தைக்கு நான் நிரந்தரத் தாயாகவும் தந்தையாகவும் இருப்பேன் என்று அழுதபடி கூறிய மாலதி குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

யாவும் கற்பனையே

முற்றும்.

பத்மநாதன்

# கவியரங்கு

**அறுபதும் கடந்த அம்மாவுக்கு ஓர் அன்பு மொழி**

குங்குமம் வைத்தோர் எல்லோரும் குமரிகளுமல்ல
குங்குமம் இழந்தோர் எல்லோரும் கிழவிகளுமல்ல
பெண்ணே உன் வயதை எண்ணிப்பார்
பின்னே வரும் நாளை எண்ணிப்பார்
செயற்கை அழகு உடன் வருமா
சேர்ந்து போகத் துணைவருமா
மறந்து மகிழ்ந்து வாழ்கின்றோம்
இறந்தால் என்ன காண்கின்றோம்.

மங்கையர்க்கரசி ( கரோ )

**பெண்ணே உனக்கோர் நன்மொழி**

கூந்தலைப் பறக்க விடாதே- உன்
கோலத்தை மாற்றி விடாதே
அழகிய கூந்தலைக் குறைக்காதே அது
இறைவன் தந்த தனி அழகு
அழகிய வண்ணக் கொண்டை கட்டு
அதில் ஒரு வண்ண மலர் சூடு
ஆலயம் வரும் போதும் உன்
அழகிய கூந்தலை நன்றாக
கூட்டி வாரிப் பின்னி விடு
கொண்டைகளாகச் சொருகி விடு
அழகிய வண்ணச் சேலை கட்டு
அரைகுறை உடையை விட்டு விடு
அங்கொரு பட்டை கட்டிப் பார்
அதிலொரு வண்ணம் கண்டிடுவாய்
பாரினிலுன்னை யாவருமே
பாவையவள் அழகைப்பார் என்று
கூறிடும் தேன்மொழி கேட்டிடுவாய்
யாவரும் மெச்சிட வாழ்ந்திடுவாய்

மங்கையர்க்கரசி ( கரோ )

# சட்டமும் சிரிக்கும்

## நினைவில் நின்ற நீதிமன்ற நிகழ்வுகள்

செ. சிறிக்கந்தராசா Bsc. LLM

## நாசமாப் போ நீ! நேசமாப் போ நீ

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பராமரிப்பு வழக்கு ; தொலுக்கு முதலியார் வழக்குகளைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

தொலுக்கு முதலியார் : நாசமாப் போநீ
நாசமாப் போநீ
நாசமாப் போநீ

நீதிவான் : ஏ உமக்கென்ன பயித்தியமா? ஆசைத் திட்டுகிறீர்?

தொலுக்கு முதலியார் : விண்ணபகாரரின் பெயர் அப்படித்தான் ஐயா எழுதப்பட்டிருக்கிறது.

நீதிவான் : இவ் வழக்கின் எதிராளியின் பெயர் என்ன?

தொலுக்கு முதலியார் : வேசைபிள்ளை

நீதிவான் : இங்கே யாரப்பா வேசைபிள்ளை?

ஒருவர் : என்னுடைய பெயர் V. ஆசைப்பிள்ளை ஐயா ( V. ASAIPILLAI )

நீதிவான் : உன்னிடம் படி கேட்டு வழக்கு வைத்திருப்பவர் யார்?

எதிராளி : என்னுடைய மனைவி ஐயா

நீதிவான் : அது சரி, அவருடைய பெயர் என்ன?

எதிராளி : நேசம்மா பொன்னி (NASAMMAPONNI)

நீதிவான் : அட நாசமாகப் போக:
அரைகுறை இங்கிலீசு படித்த முதலியார், நேசம்மா பொன்னியையா நாசமாப் போநீ என்று வாசித்தார்? ( முதலியாரைப் பார்த்து நீதிவான் முறைக்கிறார்.)

தொலுக்கு முதலியார் : " ஐ ஆம் சொறி சேர் "

நீதிவான் : முதலியாரைப் பார்த்து, " நீர் கெதியில இங்கிலீசு படித்திடவேனும் இல்லாவிட்டால் கோட்டிலை எல்லாமே நாசமாய்ப் போய்விடும். "

தொலுக்கு முதலியார் : சரி ஐயா!

நீதிவான் : மிஸ்ரர் ஆசைப்பிள்ளை இங்கே வாரும், படிகட்டப்போகிறீரா அல்லது ஒன்றாக வாழப் போகிறீரா?

எதிராளி : ஒன்றாக வாழப்போகிறேன் ஐயா:

நீதிவான் : நேசம்மா பொன்னி : இங்கே வா, கோட்டடிக்கு நீ வந்தால் எல்லோரும் உன்னை "நாசமாப் போ நீ" என்றுதான் சொல்லுவார்கள் , உன்னுடைய கணவனை வேசைபிள்ளை என்பார்கள் எனவே, அடுத்த வார்த்தை பேசாமல் உன் கணவனுடன் உன்னுடைய கணவன் வீட்டுக்கு நேசமாப்போநீ.

வளக்காளி : சரி ஐயா கோட்டடியிலே முதலியாராலே நானும் என்னுடைய அவரும் அவமானப்பட்டது போதும்.

# கொழுகொம்பு

அப்போது தான் அந்த அல்லி மலர் இளம்காலைப் பனிநீரில் முகம் கழுவி இருக்க வேண்டும். சூடான சூரியனின் சீற்றத்தினால் சிதறிவந்த ஒற்றை ஒளிக்கற்றை ஊடுருவி அந்த அல்லியின் இளமைக்கு மஞ்சள் பூசிக்கொள்கிறது. பட்பட்டென்று சிறகடித்துப் பறக்கும் பறவைக் கூட்டம் பனிப்புகாரை ஊடறுத்து எங்கோ தொலை தூரம் பறந்து போகின்றன. அங்கும் இங்கும் தாவித்திரிந்து, அந்த குளக்கரையை ஒட்டிக் குறுக வளர்ந்து நிற்கும் தென்னங்கன்றுகளின் இளநீருக்கு வசைபாடும் அணிற்பிள்ளைகள் அந்த சூரியவெப்பத்தில் குளிர்காய்கின்றன.

குளக்கரையை ஒட்டி குறுக்காக ஊடறுத்துச் செல்லும் ஊரணி வாய்க்கால். அதன் ஒருபக்கம் பருவம் அடைந்து விட்ட தென்னம்பிள்ளைகள் தாவணிக்குள் தங்கள் முகம் புதைக்க, மறுபக்கம் பச்சைப் பசேல் என்று பரந்து விரியும் நெல்வயல், நாற்று நிறம்மாறி பூத்துப்புதுப்பெண்ணாய் தலைகுனிகின்றன. நெல்லு முற்றியதும் வந்த நாணத்தினால்.

அது ஒரு சராசரி விவசாயக் கிராமம். எமது நாகரீகம் என்பது நாம்தான் என்று கலாச்சாரத்தைப் பறை சாற்றி நிற்கும் புண்ணிய பூமி அது. நாளுக்கு நாள் நிறம் மாறும் நாகரீகத்தில் இருந்து விலகி வந்து, நாம் கண்ட நாகரீகம் இதுதான் என்று எடுத்துரைக்கும் ஆண்களும் பெண்களும். அவர்களின் ஒருத்திதான் பவளம். பாரப்பதற்குப் பூவாய் இருப்பாள், பேசினால் பாவாய்க் கேட்பாள், நடந்தால் நிலம் கூட நாணும், நடம் இட்டால்அம்மா! கேட்கவும் வேண்டுமா. ஒருகாலத்தில் இந்தத் தென்னந் தோப்பில் துள்ளித்திரியும் அணில்பிள்ளைகளுக்கும் அவளுக்கும் உறவிருந்தது. காரணம் அவளது இரகசிய சந்தோசங்களை அறிந்து கொண்டவை அவைகள் மட்டும் தான். ஆனால் இன்று அவள் ஒரு நடைப்பிணம். நிதானத்தில் பாதியை இழந்து விட்டாள். நினைவே நெருப்பாகத்தகித்துப் போய்விட்டாள். அவளுக்காக பூத்துவிட்ட அத்தனை மலர்களும் அவள் கூந்தலை அலங்கரிக்காமலே அலர்ந்துவிடுகின்றன. உறவென்று உறுதி சொல்லும் எவராலும் அந்தப் பேதையின் ஊமை ஓலத்தை உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவள் உள்ளுக்குள் அழுது அழுது உக்கி விட்டாள். அவளுக்கு இப்போது இரவே நெருப்பாய்ச் சுட்டது. தலையணையை தூக்கி எறியலாமோ என்று கூட யோசிக்கிறாள். அவனோடு அவள் சேர்த்து முடிந்து செய்த கற்பனைகளைக் கட்டிக்காத்தது இந்தத் தலையணை தானே. எல்லாமே கனவாய் கதையாய் காலத்தோடு காலமாகி விட்ட போது அப்போது அவளுக்குப் பதினாறு வயதுப்பருவம். இன்னது இது என்று அறிந்து கொள்ளும் பக்குவம் இல்லாத வயது. வயதோடு போட்டி போடும் பருவ வளர்ச்சி அவளுக்கு.

பூஜைக்கு வந்த புதுப் பூவாக பட்டாடை உடுத்தி ஒயிலாக அன்று அவள் கோயிலுக்கு

வந்திருந்தாள். அன்றைய திருவிழாவிற்கு அவர்கள் குடும்பம் தான் உபயம். என்றோ எப்பவோ என்று முறிந்திருந்த உறவு ஒன்று இந்த வருட திருவிழாவோடு ஒன்று சேர்ந்திருந்தது. பவளத்தின் தந்தை பரமசிவத்திற்கு பரவசத்தைக் கொடுக்க எல்லாம் எம்பெருமான் செயல் என்று சிறப்பாகவே செய்து முடித்தார். மேளதாளம், வில்லுப்பாட்டு அது இது என்று கேளிக்கைக்குக் கூட குறைவில்லை.

உறவும் வேண்டாம் உருத்தும் வேண்டாம் என்று ஒதுங்கி இருந்த பரமசிவத்தின் தங்கை அழகம்மா மகன் மகேசனுடன் கூடமாட ஒத்தாசையாக இருந்ததால் எல்லாவற்றையும் இலகுவாகவே முடித்துவிட்டார் பரமசிவம். மகேசன் பட்டணத்தில் படித்தவன். உடைவரை மேல நாட்டு நாகரீகம் அவனைத் தழுவிக் கொண்டிருந்தாலும் மனதுவரை கலாச்சாரத்தை கட்டிக் காத்து வருபவன்.

அன்று தான் அவனும் கூட முதல் முதலில் பவளத்தை நேருக்கு நேர் பார்த்தான். அதுவும் கூட கோயிலில். முறைப் பெண்ணடா அவள் என்ற தாயின் அறிமுகத்தோடு பவளம் பூரித்துப்போனாள். மீண்டும் புஸ்பித்தாள். தலையை தாழ்த்தி கால் பெருவிரல் வரையும் கோடுகளுக்கு கேத்திரகணிதம் செய்தாள். அவளின் கைவிரல்களுக்குள் அகப்பட்டுக்கொண்ட பட்டுச்சேலையின் கரை மெல்ல நிறம்மாறிக் கெண்டிருந்தது. நிமிர்ந்தாள் நொடி கூட நிலைக்காத பார்வையால் மகேசனின் முகத்தைப் பறித்துக்கொண்டு மீண்டும் அமிழ்ந்து கொண்டாள். நாணத்தை விளம்பரம் செய்ய அவளது விஞ்ஞாபனச் சிரிப்பு மட்டும் இருந்து கொண்டே இருந்தது.

பிள்ளை வெக்கப்படுகிறாள் போலை தாயின் குரல் கேட்கும் வரை மகேசனின் விழிகள் பவளத்தையே ஆராதித்தது, அவள் அழகி என்ற ஆமோதித்தது.

அன்று அந்த கணப் பொழுதில் அடித்த அலை இன்னது இது என்று புரியாத ஏதோ ஒரு சுகத்தை இருவருக்கும் ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. பார்க்க வேண்டும் போலவும் பேசவேண்டும் போலவும் இருந்ததே தவிர இருவரும் பார்த்துக் கொண்டதும் இல்லை பேசிக் கொண்டதும் இல்லை. இதற்கு நாணமோ தைரியமோ இடம் தரவில்லை. பவளம இப்போது அடிக்கடி புதுச்சட்டை மாற்றிக் கொள்கிறாள், தலைவாரிக் கொள்கிறாள். சிலகணங்கள் தனக்குள்ளாகச் சிரித்துக் கொள்கிறாள். அதை யாரும் இன்று வரை கண்டு கொள்ளவே இல்லை. தனக்குள்ளேயே ஒரு மாளிகை கட்டி அதற்கு காதல் என்று பெயர் இட்டும் கொண்டாள்.

அவள் மட்டுமல்ல மகேசனும் கூட மாறிவிட்டான், மனதுக்குள் காதல்க்கலை கட்டிவிட்டது போலும். பட்டணத்தில் எத்தனையோ நவநாகரீக உடை அணிந்து பகட்டாக வரும் பெண்களில் ஒருத்தி கூட ஏற்படுத்தாத சலனத்தை பவளம் ஏற்படுத்திவிட்டாள். அவளது பட்டுச்சேலையும் பூச்சரமும் ஏற்படுத்திவிட்டது. பேச்சுக்களுக்கிடையில், மகேசனின் தாய் அழகம்மா ஏதாவது ஒன்றை வைத்து பவளத்தைப் பற்றி புகழ்ந்து கூறுகையில் மட்டும் மகேசனின் காதுகள் மிகவும் கூர்மையாகிப் போகிறன. இதயத்துடிப்பு அதிகரித்துத் காதுகளும் கன்னங்களும் சிவப்பேறிக் கொள்கிறது, இதயம் இரைந்து கொண்டே இருக்க இதழ்கள் மட்டும் மீண்டும் ஒருமுறை அவள் பெயரை உச்சரித்துப் பார்க்கிறது. இனிமையாகத்தான் இருக்கிறது இதழ்கள்.

மகேசன் தனக்குள்ளாக வெட்கித்துப் போகிறான்.

மகேசனுக்கு பொதுவாகவே இலக்கிய ரசனை அதிகம். அவனது இந்த ரசனைக்குள் அடங்கிக் கொண்டது பவளத்தின் அழகு மட்டுமல்ல அந்தக் கிராமத்தின் இயற்கை வனப்பும் தான். தினமும் மாலை 4 மணிக்கு முன்னதாகவே அங்கு ஓடும் ஊரணி வாய்க்கால் கரையோரம் வந்து விடுவான். அங்கு ஓடிவிளையாடும் சிறுவர்களும், ஒய்யாரமாக தலைநிமிர்ந்து நிற்கும் நெல்நாற்றுக்களும், தூரத்தே ஊர்ந்து வரும் ஊரணியில் தங்கத்துகள் பரப்பும் சூரியனுமாய் ஒவ்வொரு அந்தியும் அவனுக்காக ஓடிவரும்.

இப்போதெல்லாம் ஊரணிக்கரைக்குப் போகும்போதும் வரும்போதும் அவனை அறியாமலே அவனது விழிகள் அந்த ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயில்ப் பிரகாரத்தைப் பார்க்கிறத. தெய்வதரிசனம் வேண்டியோ இல்லை தேவிதரிசனம் வேண்டவோ எப்போதும் பவளம் தன் தோழிகளோடு அங்குதான் நிற்பாள். ஏன் அன்றும் கூட அப்படித்தான் அவனைக் கண்டபோது ஒரு புன்னகையை ப் பரிசளித்தாளே. நாணத்தில் குளித்து வந்த அந்தப் புன்னகைக்கு அர்த்தங்கள் தான் எத்தனை. அதிலே அவன் காணும் சந்தோசங்கள் தான் எத்தனை. இந்த இரகசிய சந்தோசங்களை எல்லாம் அணு அணுவாய அனுபவிக்க இப்போது அவனுக்கு அதிகம் தனிமையே தேவைப்படுகிறது.

பவளத்தின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. இரகசியக் கொண்டாட்டம் தான். மகேசனுக்கு பட்டணத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல வேலைகிடைத்துப் போய் மூன்று மாதமாகிவிட்டது. அழகம்மாவிற்குத்தான் மகனைப் பிரிந்ததில் கொஞ்சம் கவலை. இருந்தாலும் பவளத்தைக் காணும் போதெல்லாம் மனம் சாந்தமாகிப்போகிறாள். இப்போதெல்லாம் பவளம் அதிகநேரம் மாமிவீட்டிலேயே களிக்கிறாள். இது பவளத்தின் விருப்பம் மட்டுமல்ல பரமசிவத்தாரின் வேண்டுகோளும் தான். பரமசிவமும் அழகம்மாவும் அடிக்கடி பவளத்துடன் மகேசனைத் தொடர்புபடுத்திப் பேசிக்கொள்வதுஒன்றும் பவளத்திற்கு தெரியாத விடயமல்ல. இருந்தாலும் அவள் தெரியாதவள் போல் நடந்து கொள்கிறாள். எல்லாவற்றையும் பெரியவர்களே பார்த்துக கொள்ளட்டும் என்ற மனவிருப்போடு.

போய் சேர்ந்த மூன்று நான்கு மாதங்களுக்குள்ளேயே தனது புத்திக் கூர்மையையும் கடின உழைப்பையும் கொண்டு முதலாளியாரின் அன்பையும் ஆதரவையும் பெற்றுவிட்டான் மகேசன். படிப்படியான பதவி உயர்வு,

சம்பள உயர்வு எல்லாம் பார்ப்பவர்களுக்கு பொறாமையையே கொடுத்தது. அவனது நேர்மையையும் கடமை உணர்ச்சியையும் புரிந்துகொண்ட முதலாளி தனது பொறுப்பில் பாதிக்கு மேல் மகேசன் மீதே ஒப்படைத்து விட்டார். வயோதிபத்தையும் நோயையும் சரிபாதியாகக் கொண்ட முதலாளிக்கு மகேசனின் நேர்மையிலும் பொறுப்புணர்ச்சியிலும் அபார நம்பிக்கை இருந்தது. நாட்கள் நகர்ந்தன. இலை உதிர்காலம் இலை துளிர்காலம் ஆனது.

இப்போதெல்லாம் முதலாளி அலுவலகத்திற்கு தனியாக வருவதில்லே. தனது ஒரே மகள் மதுராவுடன் கூடவே வருகிறார். நாகரீகத்தின் நிறம் மாறாது வளர்க்கப்பட்ட பெண் அவள். எடுப்பான தோற்றம் மாநிறம் மிருதுவான கன்னம் பார்ப்பதற்கு அழகாகவே இருப்பாள். திடீர் என்று மதுராவை மகேசன் பார்த்தபோது முதலாளி மகள் என்ற மரியாதை இருந்ததே தவிர வேறு எந்த மனச்சலனத்திற்கும் இடம் இருக்கவில்லே. ஆனால் அதுவே தான் மகேசனின் முதலாளிக்கே மனச்சஞ்சலத்தைக் கொடுத்தது. அவரது பணத்திற்கும் கௌரவத்திற்கும் முன்னால் மகேசன் என்ற மகேசனைப்போல் எத்தனையோ மாப்பிள்ளைகளை வாங்கிக் கொள்ள முடியும். ஆனால் மகேசனிடம் அவா கண்ட பண்பாடும் பழக்கவழக்கங்களும் இன்னுமொரு அறிமுகமில்லாத வரனிடம வருமா.

ஆடம்பரமாக வாழ்ந்து பழக்கப்பட்டிருந்தாலும் மதுராவும் ஒரு பெண்தானே அவளுக்கென்று பொருத்தமான நாகரீகமான படித்த பழக்கவழக்கமுள்ள ஆணாக மகேசனை அவர் தேர்ந்தெடுத்ததில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமில்லே.

நாகரீகமாக வளர்க்கப்பட்டவள் என்பதாலோ என்னமோ மதுரா ஒரு போதும் எதையுமே தன் தந்தையிடம் மறைத்ததில்லே. தந்தையும் கூடத்தான் எந்தவிடயத்தையும் அவளுடன் பகிர்ந்து கொண்ட பின்பு தான் திடமான ஒரு முடிவு எடுப்பது அவரது வழக்கம். எப்போதும் போல் சகஜமாக அன்றும் மகேசனைப் பற்றி கூறும் போது மதுராதிருப்தியாகப் பேசியது தான். முதலாளியாரின் இந்த முயற்சிக்கே முகவுரை எழுதியது. ஆனால் மகேசனின் மனதுக்குள் பூவாய்ப் பூத்திருந்த பவளத்தின் நினைவுகளைப் பற்றி முதலாளியாருக்கு அப்போது புரிந்திருக்க நியாயம் இல்லேத்தான்.

நாலு மணிக்கு முன்னதாகவே அழகம்மா பட்டணத்திற்கு வந்து சேர்ந்துவிட்டாள் பயணக்களைப்புத்தீர ஓரமாக ஒரு ஓலேத்தடுக்கைப் போட்டுவிட்டு நீட்டி நிமிர்ந்து ஒய்வெடுத்துக் கொண்டே மகன் மகேசனோடு ஊர்ப்புதினம் பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் மகேசனின் செவிகள் மட்டும் பவளத்தைப் பற்றிய பேச்சுக்காக காத்திருந்தது.
புழுதியைக் கிளறிக் கொண்டு ஒரு பச்சைநிற பென்ஸ
கார் நின்றதும் மகேசன் திகைத்துப் போனான். அவன் சுதாகரித்துக் கொண்டு எழுந்து கொள்வதற்கு முன் வாய்நிறைந்த புன்னகையோடு முதலாளியாரும், மதுராவும் வீட்டுவாசல் வரை வந்துவிட்டனர். அழகம்மாவின் முகத்தில் தெரிந்த அத்தனை ஆச்சரியக்கோடுகளையும் புன்னகையாலேயே வாங்கிவிட்டார் முதலாளியார்.
நீங்கள் கொழும்புக்கு வரப்போறீங்கள் என்று மகேசன சொல்லியிருந்தால் நான் ஊருக்கே கார் அனுப்பியிருப்பேனே. வியப்போடு எழுந்து நிற்க முற்பட்ட அழகம்மாவை உட்காரச் சொல்லிக் கொண்டே தானும் ஒரு உருக்குலேந்துபோன நாற்காலியில் உற்கார்ந்து கொண்டார் முதலாளியார். சம்பிரதாயப் பேச்சுக்கள் தொடர்ந்தன. இடைஇடையே பிரஸ்தாபித்த முதலாளியின் பேச்சுக்கள் மட்டும் மகேசனை விலேபேச முற்பட்டன. இதனை அறிந்து கொள்ளாமலிருக்க அழகம்மா ஒன்றும் அறியாதவள் அல்ல. ஒரு மணிநேர உரையாடலின் பின் முதலாளியாரின் கார் திருப்தியோடு திரும்பியது.

கடிதம் கிடைத்ததும் பரமசிவம் அதிர்ந்து போனார். இதை அவர் கனவில் கூட

எதிர்பார்க்கவில்லே. பணம் என்ருல் பிணம் கூட வாய்திறக்கும் என்பதை தன் தங்கை செயல் மூலம் நிருபித்துவிட்டாள் என்பதை நினைக்கவே கசப்பாக இருந்தது அவருக்கு.கடிதக்காரனைக் கண்ட போதே குதூகலித்து ஓடிவந்த பவளத்திற்கு தந்தையின் முகம் புதிர்போட்டது. புரியாது விழித்த அவள் விழிகளுக்குள் அந்தக்கடிதமும் கூடவே வந்த திருமண அழைப்பிதழும் அகப்பட்டுக் கொண்டபோது மகேசன் முதலாளி மாப்பிள்ளை ஆகப்போகிருர், பவளத்தின் மனதில் இந்தச் செய்தி எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அப்போது பரமசிவம் அறிந்து கொள்ளவில்லே. காரணம் அவள் எதுவுமே தெரியாதவள் என்பது அவர் நினைப்பு.

ஆனால் அவள் நினைவல்லவா நெருப்பாகிக் கொண்டது. கட்டி வைத்த காதல் மாளிகையை ஒரு கடிதமே வந்து இடித்து விட்டுச் சென்று விட்டதே ஒ அவள் இன்னும் உயிர் வாழ்கிருள். வளர்த்த நினைவுகளை நெருப்பிலிட்டுக் கொண்டே நாளடைவில் வெந்து சாகிருள். ஒரு பூ தனக்குத் தானே நெருப்புவைத்துத் தன்னைத் தானே கருக்கிக் கொள்கிறது. அதன் இதழ்கள் கருகும் வேதனையை இதயம் தாங்குமா.

பவளம் இப்போது முழுக்க மாறிவிட்டாள் அவள் சிங்காரப் புன்னகையைச் சிறை வைத்தது என்ன சுந்தரமாய் அவள் சூடிக்கொள்ளும் மலர்ச்சரம் அவள் இளம்பட்டுக் கூந்தலில் வாசம் படாமலேயே அலர்ந்துவிடுகிறனவே ஏன் மருதாணியின் செம்மஞ்சல் நிறம் கூட தேய்ந்து மறைந்து அவள் நகம்களில் அவை சிறு பிறையாகி விட்டனவே கருவிலேயே கலேந்துவிட்ட

ஒரு உறவுக்காக அவள் உயிர் வைத்துக் கொள்ளும் ஒலம் அந்தத்தேசம் எங்கும் மௌனமாக ஒலிக்கிறது. அந்த ஒலத்தின் அனுகூலமாய் அவள் அடை காத்த காதலின் அந்தரங்கச் சாட்சிகளாய் இதயத்தில் உடைந்து ஓடும் கண்ணீர் மட்டும் இமைகளிலேயே காய்ந்துவிடுகின்றன.

திருமணத்திற்கு இன்னும் ஒருவாரம் தான் இருந்தது. ஏற்பாடுகள் தடல் புடலாக இருந்த போதும் மகேசன் அலுவலக கடமையில் இருந்து விலகவில்லே. அன்றும் வழமைபோல அலுவலகத்திற்குள் அவன் நுழைந்த போது ஏனைய சக ஊழியர்கள் அவன் மீது காட்டிய பணிவை நினைக்கும் போது மகேசனுக்கு என்னவோ போலிருந்தது.

முதலாளி மாப்பிளை இனி இவர்தான் தங்கள் எல்லோருக்கும் முதலாளி என்ற ஒரு வித பய உணர்ச்சி எல்லோர் முகங்களிலும் பூசி இருந்ததை அவன் ஒன்றும் அறியாமல் இல்லே. அதுவே அவன் அமைதி இழந்த மனதிற்கு அதிருப்தியைக் கொடுத்தது. இந்தத் திருமணத்தில் அவனுக்கு எள்ளளவு கூட விருப்பமில்லே. இருந்தாலும் தாயின் பேச்சைத் தாண்டிப் பழக்கப்படாத அவனுக்கு அவளின் கட்டளையை மீறும் சக்தியுமில்லே.

விதவையாகத் தனித்து அவனை இதுவரையில் வளர்த்துக்கொள்ள அவள் பட்ட பாட்டை நினைத்துப் பார்க்கும் போது மகேசன் மனதால் உக்கிப்போனுன் எதிர்ப் பேச்சுக் கூடபேசச சக்தியற்றவனுய் அடங்கிப்போகிருன். இருந்தாலும் அவன் இதயத்தின் எங்கோ ஒரு மூலேயில் எழும் ஓசை இல்லாத சில விசும்பல்கள் பவளத்தின் பெயரை உச்சரித்துக் கொள்கிறன.

அலவலகச் சுவர்க்கடிகாரம் 12 தடவை தட்டியபோது தான் அறிவுக்கு வந்தான் மகேசன். கண்கள் கூச்சம் கண்டன. கடிகாரத்தின் ரோமன் எழுத்துக்களைக் கூட

கண்டுகொள்ளத்திராணி அற்றவனாய் நிமிர்ந்து உட்கார்ந்தான். தலை லேசாகக் கனத்தது. வேலைக்களைப்பு, மூன்று நாள் நேரம் தவறிய சாப்பாடு எல்லாம் சேர்ந்து என்னவோ போலிருந்தது மகேசனுக்கு. எழுந்து நின்று உடம்பை ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம் என்று எழுந்தான். முட்டியை யாரோ இழுத்துப் பிடிப்பத போல உணர்ந்தான். முயற்சித்தான், தலை லேசாகச் சுற்றியது. அதிலேயே தடுக்கி விழுந்துவிட்டான். என்னவோ ஏதுவோ மகேசன் மூச்சையாகிவிட்டான். ஏனைய ஊழியர்கள் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். ஆளும் பேதுமாக அவனை அள்ளி எடுத்து அருகில் இருந்த மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள்.

அரைமணி நேர சிகிச்சைக்குப் பின் மீண்டும் சுயநினைவுக்கு வந்தான். வெள்ளை உடை உடுத்த வைத்தியர் ஒருவர் அவனது வருங்கால மாமனாருக்கு எதையோ பெரிதாக விபரித்துக் கொண்டிருப்பது அவனது கலங்கிய கண்களுக்குள் லேசாகத் தெரிந்தது.

மகேசன் இப்போது தேறிவிட்டான். மூன்றுமாத காலம் உப்புப்புளி இல்லாத கூட்டுக்கறி சாப்பிட்டே அவனது நாக்கு மரத்துப் போய்விட்டது. நாளைக்கே அவனை வீட்டுக்குக் கொண்டு போகலாம் என்று வைத்தியரே கூறிவிட்டார். கையில் இருந்த காசும் நகையும் கரைந்து போகும் வரைக்கும் வைத்தியருக்கு இதைக் கூற மனம் வரவில்லை. மகேசன் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டே கட்டிலின் மறுபக்கம் திரும்பினான். தாய் தூரத்தில் ஓட்டமும் நடையுமாக வருவது தெரிந்தது. அவனது இமை ஓரத்தில் ஊர்ந்துகொண்ட நீர்த்திரள் அம்மா என்று உதிர்ந்தது.

அழகம்மா இளைத்துப் போய்விட்டாள். அவள் தான் தனியாக ஓடியாடி மகேசனுக்கு சாப்பாடு கொண்டு வருவதும் போவதும். வந்த முதல் நாள் தவிர இந்த மூன்று மாதத்திலும் முதலாளியின் பேச்சுப்பட்ட காற்றுக் கூடஅந்த வைத்தியசாலைப் பக்கம் பட்டதில்லை. நியாயம் தான். இருதய நோயால் பீடிக்கப்பட்ட ஒருவனை தனது மகளுக்கு மணம் முடித்துக் கொடுப்பதைக் காட்டிலும் எங்காவது ஒரு பாழ்ங் கிணற்றில் தள்ளலாம் என்று அவர் நினைத்தது நியாயம் தான். இருந்தாலும் ஒரு தரம் வந்து சுகம் விசாரித்திருக்கலாம். வந்த முதல் நாளே என்ன நோய் என்று வைத்தியருடன் உரையாடித் தெரிந்து கொண்ட பின் விலகிக் கொண்டதை நினைக்கும் போது தான் மகேசன் மனம் நொந்து கொண்டான்.

வந்ததும் வராததுமாக கூட்டுக்கறியையும் கரைத்த சோற்றையும் பதமாகப் பிசைந்து மகனுக்கு ஊட்டுவதிலேயே கவனமாக இருந்தாள் அழகம்மா. மகேசனின் கண்களை நேராக உற்றுநோக்கத் தைரியம் அற்றவளாய் பார்வையை அங்கும் இங்கும் திசை திருப்பிக்கொண்டே மதுராவுக்கு வாரமாதம் வேறை பெரிய இடத்திலை கலியாணமாம் மாப்பிளை லண்டனிலை இருந்து வாறானும் தாயின் பேச்சோடுகூட்டுக் கறியும் சேர்த்து ருசித்தது அவனுக்கு. வானம் விரிந்து கிடந்தது, வயல் பரப்பில் அறுவடையானநெற்பயிர்கள் கற்றைகளாய்
குவிந்து கிடந்தன. இந்த வருடம் அறுவடை அமோகம் என்பதை அங்கு ஓடிப்பிடித்து விளையாடும் குழந்தைகளும் அவர்களது செந்தளித்த முகங்களுமே காட்டிக் கொடுத்தது. குறுக்காக ஊடறுத்துப் பாயும் ஊரணியின் விழிம்பில் மகேசன் மௌனமாக நடந்து வருகிறான். அவன் மனதில் மட்டும் ஏதேதோ எண்ணங்கள் சிந்தனைகள் அலைமோதிப்

போகின்றன.

அவனுக்கு இருதய அமுத்த நோயாம் இந்த இளம் வயதிலேயே. ஒரு தடவை இருதய அதிர்ச்சி ஏற்பட்டால் மீண்டும் ஏற்படச் சாத்தியம் உண்டாம். முதற் தடவை ஏற்பட்ட போது உயிர்தப்பியதே ஏதோ பெரும் புண்ணியம் என்று கூறிய வைத்தியர் டப்பா நிறைய மாத்திரைகளையும் மனது நிறைய ஆலோசனைகளையும் கொடுத்து அனுப்பியிருக்கிறுர். பட்டணத்தில் இருந்து தான் என்ன பயன். நோயாளி என்பதால் திருமணத்தில் இருந்தும், மூன்று மாதங்களுக்கு மேல் லீவு எடுத்ததால் வேலையில் இருந்தும் முதலாளியாரே அவனை விலக்கிவிட்டார். கையிலே வேறு பணம் இல்லை. என்ன செய்வது. அழகம்மாவின் திட்டப்படி ஊரிலேயே சிலகாலம் தங்கி இருக்கலாம் என்பது உத்தேசம். முடிந்தால் பவளமும் ஒத்துக் கொண்டால் பரமசிவத்தின் காலில் விழுந்தாவது மகேசனுக்கு அவளைத் துணையாக்கிக் கொடுத்துவிட வேண்டும் என்பது அழகம்மாவின் சுயநலம். உண்மை தான் இந்த ஒற்றைக் கொடிக்கு இனி நிட்சயம் நல்ல ஒரு கொழு கொம்பு தேவை.

வாய்க்கால் வரப்பைத் தாண்டி நெடுக வளர்ந்து நிற்கும் தென்னந்தோப்பை ஊடறுத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் இருவரும் இறங்கி நடக்கின்றனர். ஏதோ இழந்துவிட்ட ஒன்றைத் திருப்பிப் பெறுகிற மனஉணர்ச்சி இருந்தாலும் அழகம்மாவின் அடிமனதில் ஏதோ ஒரு குற்ற உணர்வு உறுத்துகிறது.

தென்னங்கீற்றின் இடுக்குகளுக்கூடாக ஊடுருவி வந்த தென்றல் மகேசனின் மேவாயில் மிருதுவாகப் பட்டுப்போகிறன. பச்சைக்கிளிகளின் பிள்ளை மொழிகளும், தூரத்தே தேய்ந்து ஒலிக்கும் குயிலின் கூவலும் இன்னும் இங்கு கேட்டுக் கொண்டு தான் இருக்கிறன. பட்டணத்தில் காணுத கிராமத்தின் வனப்பு இதைத் தான் அன்று அவன விரும்பினுன். ஆனுல் ஏதோ விரத்தி வாழ்க்கையே சூனியமானதான மிரட்சி

தூரத்தே அந்த ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயிலின் பிரகாரம் துலக்கமாகத் தெரிகிறது.

அவனது தளர்ந்த நடையில் சிலகணத் தயக்கம்

பவளம்! அவள் சாதாரணமாக இங்கு தானே நிற்பாள் மகேசன் நினைத்துப் பார்க்கிறுன். மீண்டும் ஏதோ கசப்பான எண்ணம் அவனைச் சூழ்ந்து கொள்கிறது. வேண்டாம் அவள் வாழவேண்டியவள் எனக்காக அவள் நாளை விதவையாகநிற்பது நியாயமல்ல. எனது சூனிய வாழ்க்கைக்கு சுபநாள் வேண்டாம் சாவோடு விளையாடும் சீவனல்லவா நான அவள் நினைப்பே எனக்கு வேண்டாம்.

பீப், பீப் புறூம் புறூம் வாகனம் வருகிறது. யாரோ ஒரு குழந்தையின் விளையாட்டு வாகனம் தான். மகேசனும் அழகம்மாவும் ஒற்றையடிப் பாதையை விட்டு விலகி நிற்கிறனர். வந்த வாகனம் அருகிலேயே நிற்கிறது. அது, அது அவள் அவள் என்றுல்? பவளம் இது என்ன சின்னப் பிள்ளையாட்டம் விளையாட்டு, சீவாத முடி, அலங்கோல உடை அவளுக்கென்ன பைத்தியமா?

பவளம் உனக்கு என்ன நடந்தது அழகம்மாவின் கேள்விக்குப் பதில் கூருத வாகனம் மீண்டும் பீப், பீப் என்ற குரலோடு புறப்பட்டது. அதைத் தடுத்து நிறுத்திய மகேசனின் கைகள் உரிமையோடு அணைத்துக் கொண்டன.

இந்தக் கொடிக்கு கூட கொழுகொம்பு தேவை தான்.

சுபநாள்.

சோமுவைக் கேட்டான் சுந்தரமூர்த்தி. அப்பாவின் குணந்தான் உனக்குத்தெரியுமே' யாரிடமாவது உதவி கேட்டுப் பழக்கமில்லை. கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளவே அவர் விரும்புவார். எதற்கும் நீ வந்து பேசிப்பார் உன் அதிர்ஷ்டம் !' என்றான் சோமு.

பாதி உற்சாகத்துடன் சோமுவின் தந்தையைக் காணச் சென்றான் மூர்த்தி. அவரைக் கண்டு பேசிய பின் பாதி உற்சாகமும் பறந்து விட்டது. உலகப்பற்றை அறுத்துக் கொண்டிருக்கும் அரைஞானியின் உபதேசத்தை அரைமணி நேரம் கேட்கும் படியாயிற்று.

கடைசியாகச் சோமுவின் தந்தை கூறினார். 'தம்பி அந்த நிறுவனத்தின் மனேஜர் கடவுள் பக்தி மிக்கவர். கொஞ்சம் ஆசாரசீலர். அவர் முன் ஆசாரசீலனாகக் காட்சியளித்தால் வெற்றி கிடைக்கும். இதற்கு மேல் என்னால் ஒன்றுஞ் செய்ய இயலாது!
அரைஞானியின் உபதேசத்தைக் கேட்ட திருப்தியோடு சோமுவின் தந்தைக்கு வணக்கங்கூறி விடைபெற்றுக் கொண்டான் மூர்த்தி.

எதற்கும் சோமுவின் தந்தை கூறியதைப் போல ஆசாரசீலனாக வேடம் புனைந்து' இன்டர்வியூ' வுக்குப் போக நினைத்தான் மூர்த்தி. காரியம் ஆக வேண்டுமானால் பேய் வேடங்கூடப்புனையலாமே !

கருகருவென்று வளர்ந்து முதுகை எட்டிவிட வேண்டுமென்று ஆசைப் பட்டுக் கொண்டிருந்த பின் முடியை வெட்டி எறிந்தான். இரண்டங்குல அகலமாகத் தாடை வரை வளர்ந்து சிலிர்த்து நின்ற ' சைட் பேண்சை ' இரக்கமில்லாமல் வெட்டித் தள்ளினான்.

புதுத் தோற்றத்துடன் காட்சியளித்த மூர்த்தியைப் பார்த்து அவன் வசித்த தெரு வியந்தது. தனயனிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தின் காரணத்தை அறிய முடியாமல் தாய் தந்தையர் தவித்தனர்.

' இண்டர்வியூ ' வுக்கு வந்திருந்த அத்தனை பேருடைய கண்களும் மூர்த்தியை மொய்த்தன. திருநீற்றை உத்தூளனமாகப் பூசி, சுழு முனையில் துலக்கமாகத்தெரியும் சந்தனப் பொட்டும் வைத்துக் கொண்டு ஒரு வாலிபன் இந்தக் காலத்தில் ' இண்டர்வியூ' வுக்கு வந்திருப்பது அதிசயப்படக் கூடியது தானே!

'இண்டர்வியூ' வுக்கு வந்திருந்தவர்களையும் சோமுவின் அரைஞானியார் கூறிய உபதேசத்தையும் ஒப்பிட்டு நோக்கிய மூர்த்திக்கு நிச்சயம் தனக்கு

# லண்டன் செய்திகள்

## தமிழர் திருநாள்

Academy of Fine Arts உம் G -Com Computers உம் இணைந்து வழங்கும் தமிழர் திருநாள் 25.1.92 மாலை 7.00 மணிக்கு Brent Town Hall, Forty Lane, Wembley இல் நடைபெறும். நடனம், நாடகம், வில்லுப்பாட்டு கவியரங்கம் ஆகியன மேடையேறவுள்ளன.
அனுமதி இலவசம்

## தமிழர் திருநாள்

TRAG, TRHA, TR-TEC இணைந்து வழங்கும் தமிழர் திருநாள் 25.1.92 மாலை 6.00 மணிக்கு The Graveney School Hall, 17 Welham Road, Tooting இல் நடைபெறவுள்ளது. இவ்விழா முத்தமிழ் விழாவாக இடம்பெறவுள்ளது. அனுமதி இலவசம்

## மாவீரர் தின விழா

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தின விழா எதிர்வரும் 2.2.1992 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு Wandsworth Town Hall, Wandsworth High Street, London SW18 இல் நடைபெறும். விடுதலைப்பாடல்கள், வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம், கவயரங்கம், நாடகக் கோர்வை இன்னும் பல சுவைமிகு அம்சங்கள் இடம்பெறவுள்ளன.

## மகாசிவராத்திரி விழா

2.3.92 அன்று உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில்(Highgate Hindu Murugan Temple) மகாசிவராத்திரி விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. நான்கு சாமப் பூசைகளின் போது நடனம், பாடல்கள், சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளன. மகாபிரசாதமும் வழங்கப்படும்.

---

இம்மலரில் பிரசுரமாகும் நிரந்தரத் தாய் சிறுகதை அலை ஒசையின் 7வது வருட நினைவாகப் பிரசுரமாகின்றது. இச்சிறுகதை எமது முதல் வருட மலரில் பிரசுரமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

– ஆசிரியர் –

# Annika

281, Hertford Road, Edmonton. N9 7ER
Tel: 081 - 805 1042 Fax: 081 - 805 1042

## Sri Lankan Cash & Carry

* Variety of Sri Lankan fish, crabs, prawns & squid
* Fresh vegetables from Sri Lanka every week
* Ready to serve kothu roti, Katta Sambol & Seeni Sambol
* Tamil & Sinhala Newspapers
* Tamil Magazines
*Tamil & Sinhala Audio & Tamil Video
* * Most Sri Lankan Groceries & kitchenware are available at Wholesale prices* *

## Major Importers and Distributers of Sri Lankan Food items in the United Kingdom

GREAT PONGAL OFFERS

| | |
|---|---|
| String Hoppers | 65p (box 55p) |
| Chillie Powder | 1.69p (box 1.50p) |
| Rice Flour | 1.19p (box 1.00p) |
| Rice | 1.19 (box 1.00p) |

Valid until 31st Jan 92

£1.00p off every £10.00 spent on
Sri Lankan Grocery on Saturday & Sunday
(Not applicable to whole sale)

Fax facilities now available to Sri Lanka via
our agents in Colombo (No fax number necessary)
Free local delivery on purchase over £10.00p
Telephone orders welcome

**Open 7 days a week from 9.00 a.m. to 10.00 p.m.**
**Weekend 8.00a.m. to 10.00 p.m.**

# வாசகர் கடிதங்கள்

லண்டனில் மாபெரும் ஊர்வலம் அட்டைப்படம் மூலம் ஈழத்த மிழரின் ஏகோபித்த ஒற்றுமையைக் காணக் கூடியதாக உள்ளது.

– ராஜகோபால் –
வோல்தம்ஸ்ரோ

லக்சுமி நேர்சின் கோம் சிறுகதை மிகவும் உணர்ச்சி பூர்வமாக இருந்தது. ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தங்கள் சஞ்சிகையில் பிரசுரிப்பது மகிழ்ச்சிக்குரியது.

– தமிழினி–
பாரிஸ்

நினைவலைகள் தொடர்ந்து வந்தால் கவிதையையாத்த புலவரின் பேனா நயத்தை வியக்கின்றேன். அந்த நாள் ஞாபகங்களை இந்நாட்களில் அசைபோட வைத்த புலவருக்கு எமது நன்றிகள்

– சந்திரஜோதி–
அல்பேட்டன்

கிழக்கின் வேதனை மாநாடு இன்னமும் விபரமாகத் தந்திருக்க வேண்டியது. எனினும் இவ்வளவாவது எழுதிய விசாகன் பாராட்டப்பட வேண்டியவர்.

– முத்தழகு–
தமிழீழம்

சட்டமும் சிரிக்குமில் சட்டம் சிரிக்கிறதா உங்கள் தமிழ் சிரிக்கிறதா? பறைநாய் எழுத்து வழக்கா பேச்சு வழக்கா நீங்கள் குழப்புகிறீர்களா அல்லது நான் குழம்புகிறேனா?

– அஸீஸ் –
வெம்பிளி

மேற்கு லண்டன் பாடசாலை விவகாரத்தை விளக்கமாக வெளிக் கொணர்ந்த அலை ஓசை உதவி ஆசிரியர் பாராட்டுக்குரியவர். அவர்கள் கடிதத்தையும் பிரசுரித்து உங்கள் விளக்கத்தையும்

போட்டமை ஒருபக்கச்சாராத்தன்மையைப் புலப்படுத்தியுள்ளது.

– குலரஞ்சினி–
சவுத் கேட்

Science & Technology ஆங்கிலத்திலும் வரவேண்டும். இங்கு பிறந்து வளர்ந்த நாம் உங்கள் பத்திரிகையில் வாசிக்கக் கூடியதாக இருப்பது அது மட்டுமே. தயவு செய்து ஆங்கிலத்தை நிறுத்தாதீர்கள்.

– நோயல்–
லெயிற்றன்

போராளியின் பாதங்கள் நிச்சயமாக உண்மைச் சம்பவமாகவே இருக்க வேண்டும். கீர்த்தியின் கற்பனை வளத்திற்குக் குறைவேயில்லை.

– பாரதி–
எட்மன்ரன்

லண்டன் நிகழ்ச்சிகள் ஒரு பக்கத்துடன் நிறுத்தி விட்டீர்கள். லண்டனில் பிரசுரமாகும் அலை ஓசையில் லண்டன் செய்திகள் போதாது. உங்கள் நிருபர்கள் என்ன படுத்து விட்டார்களா?

– கானமூர்த்தி–
மேற்கு ஜேர்மனி

விபுலானந்தரின் கட்டுரை அவரது விழா நேரத்தில் பிரசுரித்துள்ளீர்கள் பற்றிமாகரன் தமிழை நன்கு கையாண்டுள்ளார்.

கடந்த அலை ஓசையில் பல மாற்றங்களை அவதானித்தேன். ஆக்கபூர்வ மான மாற்றங்கள். எழுத்துக்களைச் சிறுப்பித்து இன்னமும் செய்திகளைக் கூட்டுங்கள்.

– கேதீஸ்லரன்–
கனடா

நீண்ட நாட்களாக அலை ஓசை சஞ்சிகையைக் காணாது மனம் வருந்தினேன். மீண்டும் வருவது மகிழ்ச்சிக்குரியது.

– சுந்தரம் – வுட்கிறீன்

# அலை ஓசை

தமிழ் ஆங்கில விஞ்ஞான கலாச்சாரச் சஞ்சிகை
TAMIL ENGLISH SCIENCE & CULTURAL MAGAZINE
அலை 7 ஓசை 1 தை – மாசி 1992 Jan. -Feb. 1992

வாசகர்களுக்கு எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

கடந்த வருடம் புரட்டாதி மாதத்தின் பின்னர் அலை ஓசை இதழ் இத்தை மாதத்திலே தான் வெளிவருகின்றது. இவ்வளவு கால தாமதத்திற்கு வாசகர்களாகிய உங்களிடம் முதற்கண் மன்னிப்பு வேண்டி நிற்கின்றோம்.

இத் தாமதத்திற்கு அலை ஓசையின் ஆசிரியர் குழுவின் இயலாமை காரணமல்ல. அலை ஓசைச்சஞ்சிகையானது வோல்தம் பொறெஸ்ட் தமிழ்ச் சங்கத்தின் ஒரு பகுதியாகும்.

தமிழ்ச்சங்கத்திற்கு வருடாவருடம் நிர்வாகசபை பொது அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படுவது வழமை. கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் முக்கியமான உறுப்பினர்கள் இவ் அலை ஓசைச்சஞ்சிகையை வெளிவராமல் தடுப்பதற்குப் பல விதத்திலும் இடைஞ்சல்கள் கொடுத்தார்கள். இருப்பினும் அலை ஓசை ஆசிரியர் குழுவின் இடைவிடாமுயற்சியால் காலம் தாழ்த்தியாவது வெளிவந்து கொண்டிருந்தமை நீங்கள் அறிந்ததே.

இப் பிரச்சனைகளை அறிந்த அலை ஓசையின் பல அபிமானிகள், வாசகர்கள் முன்னைநாள் நிர்வாக சபை முக்கிய அங்கத்தவர்களுக்கு (அலை ஓசையின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுத்தியவர்கள்) பல விதத்திலும் அறிவுரைகள் வழங்கியபோதும் எல்லாமே விழலுக்கு இறைத்த நீரைப்போல, செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆனது. அவர்கள் மேலும் மேலும் அலை ஓசையின் ஆசிரியர் குழு மீது அவதூறான பல வதந்திகளைப் பரப்பினர்.

இப்படியான விசமப் பிரச்சாரங்களினால் கொதிப்படைந்த

பொது அங்கத்தவர்கள், இவ்வருடப் பொதுக்கூட்டத்தில் கடந்த காலத்தின் இப்பிரச்சனைக்குரிய அங்கத்தவர்களை நிர்வாக சபை உறுப்பினர் பதவிகளில் இருந்து தூக்கியெறிந்தனர்.

எது எப்படி இருப்பினும் தற்போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை, அலை ஓசையின் வளர்ச்சிக்கு எல்லாவிதத்திலும் உதவிகள் புரிந்தாலும் இனிவரும் ஆண்டுகளில் தெரிவு செய்யப்படும் நிர்வாக சபை அலை ஓசையின் வளர்ச்சிக்கு உடந்தையாக இருக்குமென்பதில் எந்த வித உத்தரவாதமுமில்லை. கடந்த வருட நிர்வாக சபை அங்கத்தவர்கள் அலை ஓசை ஆசிரியர் குழுவின் கருத்துச் சுதந்திரத்திற்குப் பலவித தடைகள் அளித்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

எனவே ஆரம்பகாலமுதல் இயங்கிவரும் இவ் அலை ஓசை ஆசிரியர் குழுவின் சேவை தொடர்ந்தும் இருக்குமென்பது சந்தேகத்திற்கிடமானதே. இருந்தாலும் நிர்வாக சபை தெரிவு புதிய ஆசிரியர் குழு ஒன்றைத் தெரிவு செய்யுமிடத்து அப்புதிய ஆசிரியர் குழுவிற்கு எம்மாலான சகல ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம். வாசகர்கள், விளம்பரதாரர்களாகிய நீங்களும் கடந்த காலங்களில் தந்த ஒத்துழைப்பைப்போலன்றி மேலும் அலை ஓசையின் வளர்ச்சிக்கு கூடியஅளவில் ஒத்துழைப்பைக் கொடுப்பீர்கள் எனஎதிர்பார்க்கின்றோம்.

| | |
|---|---|
| ஆசிரியர்கள் | – பால ரவீந்திரன், க. ஜெயகுமார் |
| உதவி ஆசிரியர்கள் | –க. மேகநாதன் , சி. ந. ரகுராம் |
| ஆங்கிலம் | –டாக்டர் ச. மகேஸ்வரன் |
| விஞ்ஞான தொழில்நுட்பம் | –ப. நந்தகுமார் |
| நிருபர்கள் | –(அவுஸ்திரேலியா) வி. அரவிந்தன், |
| | ( கனடா) க . கேதீஸ்வரன் , |
| | (டென்மார்க்)ஆர். கருணாகரன் |
| | (பிரான்ஸ்) க.கருணாநிதி |
| | (நோர்வே) கு. சிந்து |

வெளியீட்டார்கள் – வோல்தம் பொறெஸ்ட் தமிழ்ச் சங்கம்

KUMARANS

# குமரன்ஸ்

# தமிழ்க் கடை

142, Hoe Street, Walthamstow, London E17 4QR
Tel: 081 - 521 4955 & 081 - 520 5960
Fax: 081 - 521 9482
Tube: Walthamstow Central
Open Seven days a week (8 a.m. - 11 p.m.)
Sri Lankan Off Licence

## Alai Osai - அலை ஓசை

**Subscription Rates** (12 copies) £9.60 only
(E.E.C. Countries £10.80. All other Countries £12.00)
Payment made by Cheque or Money order
Payable to "Waltham Forest Thamil Sangam(Alai Osai)"
Please complete this form and post to
Alai Osai Publications
Waltham Forest Thamil Sangam
109, Philip Lane, London N15 4JR

Name:..........................................................................

Address:......................................................................

..........................................................................

Tel No:......................................

| ............................ | ................ | ................ |
|---|---|---|
| Signature | Date | Starting month |

# CAPITAL AUTOS

## VW AUDI SPECIALISTS

307 - 311 SPROWSTON MEWS, FOREST GATE E7
(Rear of 311 Romford Road)

Telephone: 081 - 519 3041 081 - 519 6187
Mobile: 0860 485247 0860 570031



SPECIALIST
IN AUDI
SECOND HAND
SPARES

SERVICING ELECTRONIC TUNING
PRE - MOT CHECKS. ALL MECHANICAL &
ACCIDENT REPAIRS. RESPRAYS. WELDING.
INSURANCE WORK. FREE ESTIMATES